# திறவுகோல்

2051 ஆனி
மாத இதழ்

உழைத்த பணம்

ஒளிரும் ஆசிரியர் பகுதி - 8

கிருமிகள் சூழ் உலகு!

வானம் பார்த்த பூமி!.

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# தேனீ வளர்ப்பு!



விஜயவர்மன்

‘‘நாங்கள் அழியும் தருணம், உங்களையும் கூட்டி செல்வோம்’’ இப்படிக்கு தேனீக்கள் என்ற வாசகம் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவத்தை பறை சாற்றுகிறது. மனிதர்கள் உண்ணும் உணவில் மூன்றில் ஒரு பங்கு உணவு பூச்சிகளின் மகரந்த சேர்க்கை மூலமே கிடைப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

தேனீ விவசாயிகளின் தோழன் என்ற வாசகத்தை பெரும்பாலும் அனைவரும் அறிந்திருப்போம். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தேனீக்களை கடைசியாக எங்கே பார்த்தோம் என நினைவிருக்கிறதா? சிலர் அவ்வாறான தேனீ கூடுகளை பார்த்து பல வருடங்கள் இருக்கலாம்.

மனிதர்களுக்கு அடுத்து அதிகம் ஆராய்ச்சி செய்யப்பட்ட உயிரினம் தேனீ என்பதை அறிந்த பொழுது எனக்கு சற்று வியப்பு தான். தமிழகம் புதுச்சேரி எல்லையில் கடலூர் பண்ருட்டி செல்லும் வழிக்கு அருகில் உள்ள ஒரு சிறு கிராமத்திற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பு சென்ற பின் அவ்வாறான ஆராய்ச்சிகளின் காரணம் புரிந்தது.

தேனீக்களின் கூடு ஒரு தனி அரசாங்கம்; நம் அரசியல் அமைப்பில் உள்ளது போல் மந்திரிகள், அமைச்சர்கள், சட்ட சபை உறுப்பினர்கள் எனத் தனித் தனி அந்தஸ்து எல்லாம் கிடையாது. ஓராயிரம் தேனீக்கள் சேர்ந்து ஒரு கூட்டினுள் வசிக்கிறது எனில் ஒரே ஒரு ராணி, சில ஆண் தேனீக்கள் மற்ற பல நூறு பெண் தேனீக்கள் (அனைத்தும் தொழிலாளி தேனீக்கள்).


ஏதேனும், சூழ்நிலையில் அந்த ராணி தேனீ இறந்துவிட்டால், தங்களுக்குள் வலிமையான பெண் தேனீ ஒன்றை தேர்வு செய்து அதனை ராணியாக ஏற்று கொள்வார்கள். பல நூறு தேனீக்களிலும், ராணி தேனீ மட்டும் கொஞ்சம் தடிமனாக, வலுவான தேனீயாக இருக்கும். ஏனெனில், இங்கு இனப்பெருக்கம் செய்வது ராணி தேனீயுடைய கடமை.


நாம் அங்காடிக்கு சென்று 2 தேன் பாட்டில்களை வாங்கி வருகிறோம்; பெரும்பாலும் அவை இரண்டின் சுவையிலும் சிறு மாறுதல்களைக் கூட காண இயலாது. ஆனால், நிதர்சனத்தில் ஒவ்வொரு தேன் கூடுகளில் (தேன் பெட்டிகளில்) உள்ள தேனின் சுவையும் மாறுபடும். வேப்ப மரங்கள் நிறைந்த பகுதியாய் இருப்பின், அதில் கசப்பு சுவை கலந்திருக்கும்.

தேனீக்களின் வசிப்பிடத்தில் உள்ள மரங்களும், அவற்றில் பூக்கும் பூக்களின் வகைகளை வைத்தே தேனின் சுவையில் மாறுதல்கள் ஏற்படும். ஒவ்வொரு தேனீயின் ஆயுட்காலம் 60 நாட்கள்; முதல் 15 நாட்கள் கூட்டினை பராமரித்தல், 16-20 நாட்கள் கூட்டிற்குள் வேறு உயிரினங்கள் புகாதவாறு படை வீரர்களாக செயல்படுதல்; 21-60 நாட்கள் உணவு சேகரிப்பு; 61 வது நாள் மரணம் என தனது வாழ்நாளை, தான் வசிக்கும் இடத்தை

பலப்படுத்துவதில் அக்கறை காட்டுகின்றது இந்த உயிரினம்.

இரண்டு அடுக்குகள் கொண்ட பெட்டியில், தேனீகளை வளர்ப்பது சுலபம். கீழ்தட்டு புரூட் பெட்டி எனவும், மேல் தட்டு சூப்பர் பெட்டி எனவும் அழைக்கப்படுகிறது. கீழ் தளத்தை தேனீக்களின் உணவுக்காக வைத்து விட்டு, மேல் தட்டில் மட்டும் தேனை எடுத்து வியாபரம் செய்கின்றனர், தேனீ வளர்ப்பாளர்கள்.



ஒரு பெட்டிக்கு 4 முதல் 5 சட்டங்கள் வரை வைக்கலாம். ஒவ்வொரு சட்டத்திற்கு நடுவிலும் உள்ள பகுதியில் தேனீக்கள் அறுகோண வடிவில் (Hexagon) தங்கள் கூடுகளை அமைத்து கொள்ளும். இந்த அறுகோண வடிவ கட்டுமானம் மிக பலம் வாய்ந்த கட்டுமான முறையாக இன்றும் கருதப்படுகின்றது.

தேனீ வளர்ப்பாளர்கள் தேன் விற்பனை செய்வதோடு மட்டுமின்றி, இது போன்ற பெட்டிகள் விற்பனை, தேனீக்கள் விற்பனை என தங்களால் இயன்ற வழியில் இந்த தொழிலை லாபகரமாக மாற்றி வருகின்றனர். ஒரு பெட்டியை தேனீக்களுடன் இடம் பெயர்தல் செய்யும் பொழுது அதில் ராணி தேனீயின் இருப்பை உறுதி செய்வது, இரவு நேரங்களில் மட்டுமே இடம் பெயர்தலை மேற்கோள்வது என தேனீக்களின் வாழ்க்கை முறையினை அறிந்து அதற்கேற்ப பல சூத்திரங்களை கையாளுகின்றனர்.

தேனீ வளர்ப்பில் ஆர்வம் உடையவர்கள், அதனை பற்றி அரிய விரும்புபவர்கள் ஒரு நாள் பயிற்சி வகுப்பிற்கு சென்று அதனை பற்றி தெரிந்து கொள்ளலாம். நான் சென்ற பொழுது பயிற்சி கட்டணம் 500 ஆக இருந்தது; கிராமத்து மதிய உணவு, ஒரு நாள் முழுவதும் தேனீக்களுடன் வகுப்பு என வித்தியாசமான அனுபவம்.

விருப்பமுள்ளவர்கள் Google Map செயலியில் SKM Natural Honey என்று தேடினால், அதற்கான தகவல் கிடைக்கும். வாய்ப்பிருந்தால் ஒரு முறை சென்று வாருங்கள்!

**– விஜயவர்மன்,** மன்னார்குடி

# உழைத்த பணம்

முன்னுரை:



உழைத்த பணம் என்ற இந்த சிறுகதை உண்மையை அடிப்படையாய் கொண்ட புனைவு சிறுகதை. ஒரு சிறு நிகழ்வு சாட்டையடி போல உண்மையை உரைத்து புத்தி புகட்டிவிடும். அது போன்ற ஒரு சம்பவத்தை வைத்து புனைய பட்ட சிறுகதை தான் இது. எனது முந்தைய சிறுகதைகளை வாசித்து என்னை மேலும் எழுத ஊக்குவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது கோடி நன்றி கலந்த வணக்கங்கள். உங்கள் நேரத்தை செலவிட்டு இக்கதையை வாசிக்கும் அனைத்து வாசகர்களுக்கும் எனது சிரம்தாழ்ந்த அன்பான நன்றிகள்.

- இளவரசி இளங்கோவன், பரவாக்கோட்டை

உழைத்த பணம்

‘‘எட்டு மணிக்குள்ளே கிளம்பிட்டா பத்து மணிக்குள் வெயிலுக்கு முன்னே போய்டலாம். இல்லைன்னா கத்திரி வெயிலு தாளிச்சுடும்’’ என சொல்லிக்கொண்டே துணிப்பெட்டியை வாசலில் கொண்டு வைத்தார் வானதியின் அப்பா. வெளிநாட்டில் வசிக்கும் வானதி தனது இரு குழந்தைகளுடன் நான்கு ஆண்டுகள் கழித்து விடுமுறைக்கு இரு மாதங்கள் விடுப்பில் கிராமத்திற்கு வந்திருந்தாள். வந்த நாளிலிருந்து அவர்களை கண்ணும் கருத்துமாக பாதுகாப்பதிலே அப்பா கவனமாய் இருந்தார். இன்று நேற்றல்ல வானதிக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அப்பா அப்படிதான். வெள்ளாமையும், விவசாயமும் வீடும் ஆடும் மாடும் அதோடு அவர்கள் பிள்ளைகளாகிய வானதியும் தம்பி நடேசனும் தான் அவர் உலகம். வானதியும் தம்பி நடேசனும் திருமணமாகி அவர்களுக்கு பிள்ளைகள் வந்தபிறகு அவரது உலகத்தில் பேரன் பேத்திகள் கூடுதல் மனிதர்கள் கூடுதல் பொறுப்புகளோடு.

நெஞ்செல்லாம் பாசத்தை கொண்ட அப்பாவுக்கு வார்த்தைகளில் ஒருபோதும் வெளிக்காட்ட தெரிந்ததில்லை. கிராமத்து வெள்ளந்தி அப்பா அவர்.எப்போதும் சக்கரத்தை காலில் கட்டிக்கொண்டவர் போல சுறுசுறுப்புடன் ஓடிக்கொண்டிருக்கும் அப்பா அத்தனையும் செயலில் தான் காட்டுவார். அவர் அக்கறையோடு செய்யும் அனைத்திலும் தெரியும் அவரது அளவில்லா பாசம். கிராமத்தில் பிறந்து , அரசு தமிழ் பள்ளியில் தமிழ் வழி கல்வி பயின்று இன்று வெளிநாட்டில் இலட்சக்கணக்கில் சம்பளம் வாங்கும் வானதியின் சுறுசுறுப்பை பார்த்து வியந்து நண்பர்கள் கேட்கும் போதெல்லாம் அப்பாவை தான் நினைத்துக்கொள்வாள் வானதி.

வானதியின் அம்மா கையில் தொலைபேசி எழுதி வைக்கும் நோட்டு புத்தகத்தோடு அங்கலாய்ப்போடு வந்தாள். ‘‘கார்லே போனா என்ன இப்போ? காசு வேணும்னாலும் நான் கொடுக்கிறேன். என் இப்பிடி முரண்டு பிடிக்கிறே. அடிக்கிறே வெய்யில்லே பச்சை பிள்ளைகளே வச்சுக்கிட்டு பஸ்லே போறேன்னு ஒத்த கல்லே நிக்குறே. காருக்கு போன் பண்ணி வரசொல்லுறேன்’’ என்று சற்று கோபம் கலந்த குரலோடு நோட்டை திறந்து வாடகை கார் தொலைபேசி எண்களை தேட ஆரம்பித்தாள்.

சொந்தமாக வாகனம் வைத்துக்கொள்ளும் அளவுக்கு வானதியின் குடும்பம் ஒன்றும் பணம் படைத்தவர்கள் அல்ல. பசி பட்டினி பஞ்சமில்லாமல் இல்லாமல் வாழும் ஒரு எளிய விவசாய குடும்பம் தான் வனதியுனுடையது. சொந்தமாக இருந்த இரண்டரை ஏக்கர் நிலத்தில் முப்போகம் அரும்பாடுபட்டு விவசாயம் செய்து போட்ட முதல் விதை நெல், உரம், பூச்சிக்கொல்லி மற்றும் அறுவடை கூலி போக மீதியை கொண்டு வங்கியில் கடனை வாங்கித்தான் வானதியையும் அவள் தம்பி நடேசனையும் அப்பா படிக்க வைத்தார். இன்று இலட்சங்களில் சம்பளம் வாங்கும் வானதி அப்பா அவளது கல்லூரி கட்டணத்தை செலுத்த மூன்று மாத அவரது கடும் உழைப்பான ஒரு போகம் வெள்ளாமையை விற்று மஞ்சள் துணிப்பையில் கொண்டுவரும் பணத்தை நன்றியோடு நினைத்து கொள்வாள்.

தஞ்சை வேளாண்மணடலத்தில் அமைந்திருந்த அந்த கிராமத்தின் பிரதான தொழில் விவசாயம் தான் என்றாலும், மாறிப்போன வாழ்க்கை, ஏறிவிட்ட விலைவாசி, பெருகிவிட்ட விவசாய நடைமுறை செலவு, குறுகிய காலத்தில் பெரும்பொருள் ஈட்டும் பேராசை எல்லாமும் சேர்ந்து விவசாயம் மீதான அம்மக்களின் நம்பிக்கையை துடைத்து விட்டிருந்தது. வானதியின் அப்பாவை போன்று ஒரு சிலர் விவசாயத்தை விடாமல் பிடித்து கொண்டிருந்தார்கள். பெருகி விட்ட நகர நாகரிகம் மற்றும் சினிமா, சின்னத்திரை, கைபேசி கிராமத்தில் பெரும்பான்மையினரை சோம்பேறிகளாய் பரிணாமம் செய்திருந்தது.

நிலத்துக்கு சொந்தக்காரர் என்றாலும் வேலை ஆட்களோடு சேற்றுக்குள் இறங்கி விவசாயம் செய்யும் வானதியின் அப்பா போன்றவர்கள் மிகக்குறைவே.வெள்ளை சட்டை போட்டுகொண்டு வரப்பில் நின்று கொண்டு விவசாயம் செய்து பிழைக்க ஆசைப்பட்ட வெள்ளைச்சட்டை விவசாயிகளுக்கு விவசாயம் கைகொடுக்கவில்லை கசந்தது. பாதி பேருக்கு மேல் பெரும்பொருள் ஈட்டவும், வாங்கிய கடனை அடைக்கவும் வெளிநாட்டுக்கு நல்லத்தனமாகவும் கள்ளத்தனமாகவும் விமானம் ஏறினார்கள். பாதி பேர் மேல் கடை கண்ணிகள் வைத்து பிழைத்துக்கொள்ள நகரத்துக்கு இடம் பெயர்ந்தார்கள். வெளிநாட்டு காசும் , அனாவசிய செலவும் சோம்பேறித்தனம் ,வறட்டு கவுரவமும் வாடகை வாகனத்தொழில் பெறுக காரணமாயிற்று அக்கிராமத்தில். பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தலைகட்டுகளை கொண்ட கிராமத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள் எண்ணிக்கை அம்பதை தாண்டடது.

வாகனம் சொந்தமாய் கொண்டவர்களுள் வெகு சிலர் மட்டுமே வாகனம் ஓட்டத் தெரிந்தவர்கள். தெரியாதவர்கள் வாகனத்திற்கு அந்த கிராமத்திலேயே ஓட்டுநர் உரிமம் பெற்ற இளைஞர்களை வாகன ஓட்டிகளாய் வேலைக்கு வைத்திருந்தார்கள். வாகன

உரிமையாளருக்கு வேலைக்கு இருக்கும் வாகன ஓட்டிகள் தெரிந்தவராக இருந்தாலும் உறவாக இருந்தாலும் அடிமை போலவே அலட்சியமாக எண்ணும் எண்ணம் பெரும்பாலும் மேலோங்கி இருப்பதை பல சமயங்களில் வானதி கண்டிருக்கிறாள். மேலும் ஒரு சவாரிக்கு அவர்கள் கேட்கும் வாடகை மிகமிக அதிகமாக இருந்தது. சாதாரணமாக 12 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் நகரத்துக்கு செல்ல பேருந்து கட்டணம் ரூ 6 தான். ஆனால் இந்த வாடகை கார்கள் வசூலிக்கும் தொகை ரூ 300. போவதற்கும் வருவதற்கும் வாடகை கார்கள் வசூலிக்கும் தொகை ரூ 600. சொல்லப்போனால் கிட்டத்தட்ட நூறு மடங்கு.

ஆனாலும் அரை மணி நேரத்திற்கு குறைவான இடைவெளியில் தனியார் மற்றும் அரசு பேருந்து வசதிகளும் மூன்றுக்கு மேற்பட்ட பேருந்து நிறுத்தங்களும் கொண்ட அந்த கிராம மக்கள், நோயாளிகளுக்கும் அவசர தேவைக்கும் மட்டுமே பயன்படுத்த வேண்டிய அத்தியாவசிய தேவைக்கான வாடகை வாகனங்களை தங்கள் சோம்பேறித்தனத்துக்காகவும் ஆடம்பரத்தை காட்டவும் அனாவசியமாக பயன் படுத்திக்கொண்டிருப்பதை வானதி கண்டுணர்ந்தாள். அவர்களுக்கு புத்திமதி எல்லாம் சொல்லி மாற்றி விட முடியாது, அதேசமயம் அந்த ஆடம்பரத்தை அனாவசிய செலவுகளை தன்னளவில் தவிர்க்க வானதி முற்பட்டாள். அந்த விடயத்தில் தான் வானதியோடு அம்மா முரண்பட்டாள்.

வானதியின் பெரியம்மா வீட்டு அக்கா பவிதா பாசத்தோடு பலமுறை அழைத்ததை முன்னிட்டும் அங்கு இரு நாட்கள் தாங்கும் பொருட்டு, இரண்டு மணி நேர பேருந்து பயண தொலைவில் இருக்கும் அக்கா வீட்டுக்கு குழந்தைகளோடு கிளம்பிய காலை பொழுதில் தான், வானதியின் அம்மா வாடகை கார் எடுத்துக்கொண்டு வசதியாக போகுமாறு பரிந்துரைத்தாள்.

பத்து மாத குழந்தையான மகனுக்கு சட்டை அணிவித்து கொண்டிருந்த வானதி ‘‘எத்தனை தடவ சொல்லுறது. நான் பஸ்லே போறேன்னு. பஸ்லே போறதுலே உனக்கு என்ன கஷ்டம் இப்போ’’ என்று சற்று எரிச்சலான குரலில் அம்மாவை பார்த்து கேட்டாள்.

‘‘வெளிநாட்டுலேர்ந்து வந்துருக்க, ஒரு கார் எடுத்து போக முடியலன்னு அக்கம் பக்கத்துலே சொல்ல மாட்டாங்க. 1000 ரூவா தான் செலவாகும் தஞ்சாவூருக்கு போக. நானாவது காசு கொடுக்கிறேன் ஏன் இப்பிடி கஞ்சத்தனமா இருக்கிறே’’ என்றாள் அம்மா.

அக்கம் பக்கம் என்று அம்மா சொன்னதும் வானதியின் கோபம் குறைந்து பொங்கி வந்த கேலி சிரிப்பை அம்மா அறிந்துவிடாமல் மறைத்துக்கொண்டாள். எதிர் வீட்டு ஜெயம் பெரியம்மாவும் கொல்லை பக்கத்தில் வசிக்கும் பிரேமலதா மாமியும் தான் அம்மா சொன்ன அக்கம் பக்கம். வானதியின் அம்மா, ஜெயம் பெரியம்மா, பிரேமலதா மாமி மூவரும் நல்ல தோழிகள் தான் என்றாலும் ஒருவரை ஒருவர் ஏதேனும் ஒரு விடயத்தில் பின்னுக்கு தள்ள முன்னுக்கு நிற்பார்கள். மூவருக்குள்ளும் யார் கெட்டிக்காரர், யார் எல்லா விடயத்திலும் பெரியவர், யார் பிள்ளைகள் நன்றாக இருக்கிறார்கள்,யார் பேரப்பிள்ளைகள் கெட்டிக்காரர்கள் என காட்டிக்கொள்ளும் ஒரு தன்முனைப்பு போட்டி இருந்து கொண்டே இருக்கும். மூவருக்கும் பேரன் பேத்திகள் வந்து விட்டபோதிலும், இந்த மூடு பனிப்போர் வெளியில் தெரியாவண்ணம் நிகழ்ந்துகொண்டே இருந்தது. இப்போது அம்மாவின்

அங்கலாய்ப்புக்கு காரணம் கண்டுகொண்டாள் வானதி.
அம்மாவை சமாதான படுத்தும் எண்ணத்தோடு ‘‘யாராவது உன்கிட்டே வந்து கேட்டால் நான் காரிலே தான் போக சொன்னேன் அவ தான் கேக்கலே. நீங்க அவளையே கேட்டுக்கோங்கோனு சொல்லிடு. நான் பதில் சொல்லிக்கிறேன்’’ என சாந்தமான குரலில் பதிலுரைத்தாள் வானதி.

அம்மா கேட்பதாயில்லை. ‘‘நான் இவ்வோளோ சொல்லுறேன் நீ ஏன் கேட்கமாட்டேங்குறே. உனக்காக இல்லாட்டினாலும் பிள்ளைகளுக்காவது கார்லே போயேன்’’ என மேலும் வலியுத்தினாள்.

‘‘அங்க எல்லாத்துக்கும் எப்போவுமே கார்லே தானே போறாங்க. நம்ப ஊர் பஸ்லே அவங்க போனதே இல்லை. ஒரு புது அனுபவமா இருக்கட்டுமே குழந்தைகளுக்கும்’’ என வானதியும் விடாமல் அம்மாவை சமாதானப்படுத்த முயன்றாள்.

அதற்கு மேல் அம்மாவுக்கு பதில் ஏதும் சொல்லாமல் மகனை இடுப்பில் தூக்கி கொண்டு டிவிஎஸ் 50 அருகில் காத்திருந்த அப்பாவிடம் வந்தாள். ‘‘எங்களை முதல்லே பஸ் ஸ்டாண்டிலே விட்டுட்டு அப்புறம் வந்து பொட்டியை எடுத்துக்கிட்டு வந்திடுப்பா’’ என்றபடி  வண்டியில் ஏறினாள். வானதியின் ஆறு வயது மகள் ஓடி வந்து வண்டியின் முன்னாள் உற்சாகத்தோடு ஏறிக்கொண்டாள். அப்பா வண்டியாய் கிளப்பினார். அம்மா கோபத்தோடு அவர்களையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

பேருந்து நிறுத்தத்தில் இடுப்பில் குழந்தையோடு காத்திருந்த வானதியின் அருகில் டிவிஎஸ் 50 வந்து நிற்க பெட்டியோடு அம்மா இறங்கினாள். அப்பா தானே துணைக்கு வருகிறார் அம்மா எங்கே வருகிறாள் என நினைத்துக்கொண்ட வானதி கேள்விக்குறியோடு அம்மாவை பார்த்தாள்.

அருகில் பெட்டியை கொண்டு வந்து வைத்துவிட்டு ‘‘வெயிலு ஏறிக்கிட்டே போகுது, பஸ்லே கூட்டம் வேற நெறைய இருக்கும் . இப்பவும் ஒன்னும் நேரமாகலே. காருக்கு போன் செய்ஞ்சு வரசொல்லுறேன்’’ என்றாள். கடைசி நொடியில் கூட மனமாற்றம் செய்து வானதியை காரில் அனுப்பிவிடும் முயற்சியோடுதான் அம்மா அங்கு வந்திருக்கிறாள் என விளங்கி கொண்டாள் வானதி.

‘‘சொக்கலிங்கம் தாத்தா மகள் சோபியா புருஷன் லண்டனிலே இருந்து சம்பாதிக்கிறார். சோபியா எல்லா பக்கமும் கார் வச்சுக்கிட்டு தான் போகுது. திருச்சி வரைக்கும் வைத்தியத்துக்கு கார் எடுத்துக்கிட்டு தான் போகுது. ஒரு தடவைக்கு சுளையா 5000 ரூவா குடுக்குது தெரியுமா. அவ்வளவு ஏன் உன் கொழுந்தனார் அனுப்புற பணத்துலே உன் ஒப்படியா, மாமியா எல்லாம் கார் எடுத்துக்கிட்டு தான் கோயில் குலம்னு எல்லா இடத்துக்கும் போறாங்க. யாரும் பஸ்லே போறதில்லே’’ என மேலும் பேச்சை தொடர்ந்தாள்.

வாங்கிய கடனை அடைக்க வெளிநாடுகளில் தஞ்சம் புகும் அக்கிராம இளைஞர்கள் வயது, வாழ்க்கை நிம்மதி எல்லாவற்றையும் தொலைத்து பலவாறு பணிகள் செய்து அரைவயிறு

காஞ்சி குடித்து அரும்பாடுபட்டு அனுப்பும் பணத்தை கடனை அடைக்கும் வரைக்குமோ அல்ல சிறிது காலமோ சிக்கனமா இருந்து விட்டு பிறகு தாம்தூம் என செலவு செய்யும் ஆடம்பர மனைவிகளும், பெற்றோர்களும் மிகுந்திருந்ததை வானதியும் அறிந்திருந்தாள்.

எவ்வளவு சம்பாதித்தாலும் தாத்தா வழியாகவும், அப்பாவின் வாழ்க்கை மூலமும் சிக்கனத்தை பழகிவிட்டிருந்த வானதிக்கு அனாவசியமாக செலவு செய்ய மனமும் சரி கையும் சரி ஒரு போதும் ஒத்துழைத்தது இல்லை. அம்மாவும் அப்பாவுக்கேத்த சிக்கனம் தான். ஆனால் இப்போது அவளுக்கு அனாவசியமும் அத்தியாவசியமும் பற்றிய கவலையை விட அக்கம் பக்கம் கருத்து கணிப்புகள் முக்கியமானது குறித்து வானதி வேதனையுற்றாள்.

தூரத்தில் பேருந்து வருவதை கண்ட வானதி  பெட்டியையும் மகளையும் அப்பா கையில் ஒப்புவித்தாள். அம்மாவை நேருக்கு நேர் நோக்கி ''சோபியா அக்காவும், என் ஒப்படியாவும், மாமியாரும் மட்டுமில்லே நம்ப ஊர்லே இருக்கிறே ஒவ்வொருத்தங்களும் கஷ்டப்பட்டு அவங்க செலவு செய்யுற காசுலே ஒரு ரூவா சம்பாதிச்சு இருந்த செலவு செய்யுறப்போ வலி தெரிஞ்சிருக்கும். எதுக்கு குடுக்கணும் எதுக்கு சேமிக்கணுமுன்னும் தெரிஞ்சிருக்கும்.

நான் செலவு செய்யுற ஒவ்வொரு ரூவாவும் விடியக்காலை அஞ்சு மணிக்கு எழுந்து சமைச்சு, பச்சை பிள்ளைகளை காலைலே ஏழு மணிக்கெல்லாம் டே கேரிலே விட்டு அடிச்சு பிடிச்சு வேலைக்கு போய், வேலை முடிச்சு பறந்து கட்டி சாயங்காலம் அஞ்சு மணிக்கு புள்ளைங்களை அழைக்க ஓடி வந்து, ராத்திரி பாத்து மணிவரை வீடு வேலை முடிச்சு களைச்சு போய் கஷ்டப்பட்டு சம்பாதிச்சது. இப்படி 6 ரூவா குடுக்கிற இடத்துலே 600 ரூவா குடுக்க என்னாலே முடியாது. ஏன்னா இது நான் உழைச்ச காசு. பஸ் வந்துட்டு நான் போய்ட்டு வரேன்'' என்று  மூச்சிரைக்க முத்தாய்ப்பாய் சொல்லி முற்றுப்புள்ளி வைத்தாள் அம்மாவின் முயற்சிக்கு.

சிக்கனத்தை சிகரமான மகளை எண்ணி உள்ளுக்குள் பெருமிதப்பட்டாலும் தான் முயற்சி தோல்வியில் முடித்ததாலும், மகளின் பேச்சு உண்மையின் உரைக்கல்லாய்  நெற்றி பொட்டில் அடித்த வலியில் சிலையாய் நின்ற அம்மாவுக்கு பேருந்துக்குள் ஏறி கையசைத்த வானதி கூட கண்ணுக்கு புலப்படவில்லை. பெரும் இரைச்சலோடு கரும்புகையை அம்மாவின் முகத்தில் கக்கி புறப்பட்டது பேருந்து.

-முற்றும்.

**இளவரசி இளங்கோவன்,**
பரவாக்கோட்டை.

# தனிமை நடை

இடம் வலம் யாருமின்றி
தனிமையிலே நடைபோட..
எதிர் திசையில் நான்
செல்லும் பாதையோ வெகுதூரம்..

பனி போல் தூரும் தூரல்
என் முகத்தினிலே படர
என் உடல் குளிரினிலே சற்றே
சிலிர்த்தது..

அனைத்து செடி கொடி மரங்களும்
சிறிதும் அசைவின்றி ஓய்வெடுத்தது...

சீரிய இடைவெளியில்
இலைகள் ஏந்திய மழைநீர் மண்ணை
சேர
இலைகளோ துளிகளை இழந்து
துவண்ட முகத்துடன் மண்ணை
பார்த்தது...

மரங்களோ மறு மழை துளிக்காக
தன்னையே மறந்து காத்திருக்க....

நானும் நடைபோட்டேன் என்னை
மறந்து...

எங்கோ ஓர் இடத்தில்
குளிரை தாங்காத
குருவிகளின் சப்தம்
இன்னிசையாய்
செவியை துளைத்து வெளியேற
இதயமும் லேசாகி மிதக்க
ஆரம்பித்தது..

நடப்பதை(வை) மறந்து மிதப்பதாய்
உணர்ந்து மேலும் தொடர்ந்தேன்...

இயற்கையின் இந்த இரம்மியமான
சூழல்
என் இதயத்தின் கவலைகளை விடுத்து
எனை இலேசாகி பறக்க விட்டது....

இறைவா மனிதனை அன்றி மரம் செடி
கொடிகளை மட்டுமே படைத்திருந்தால்
நீ மட்டுமாவது இந்த இரம்மியமான
இயற்கையை இரசித்து
இருந்திருக்கலாம்...

ரசனை இல்லா
மனிதனையும் படைத்து
இப்படி இயற்கையை அழிக்க
வைக்கின்றாயே...

எழுத்துரு எண்ணங்கள்

பா.மாதவன்
இராச மன்னார்குடி



## ஆசைகள்

என் உலகத்தின் ஆசைகளை
ஒப்பனையற்ற என்
கைவிரலுக்குள் ஒளித்து வைத்தேன்
தேடி அலைகிறேன்
மறைத்து வைக்க இடமின்றி
கைவிரித்த நிலையில்
தவறி விடுமோ
கைதிறவா வேலையில்
கண்காதோ என்று
அடக்கிய ஆசைகள் அடங்கிய படி
பயனற்று கைக்குள் பிடித்து
வைத்து காலம் நகர்த்துகிறேன்
வாழ்க்கையின் பாடம் இதுவென்று!

## நீ மட்டும்

என் கனவில் நீ மட்டுமே
நினைவிலும் நீ மட்டுமே
வருவன நாட்களிலும் நீமட்டுமே
உயிர் கேட்கும் ஓசையதனில்
நீ மட்டுமே
நிஜங்களின் நிமிடங்களுக்கு
காத்திருப்பது நான் மட்டுமே !

## உறைவாள்

விரல்களின் நுனியில்
வண்ண சாயங்கள் பூசி
நகத்தின் கூருக்கு இணையாக
வித்தியாச சாயங்கள் தேடி
வாங்கி மகிழ்ந்தேன்
விழாக்களில் ஒப்பனைகள்
செய்து ரசித்தேன்
விரல் நுனியில் என் உலகம்
இருக்கென்று
எனகென்று தனி பாதுகாப்பு
அதிலுண்டு
சீண்ட தோனும் கழுக்கின்
நகத்திற்கு பதில் பேச
சில்லறை சேத்து வைத்து
வர்ணம் வாங்கி மெழுகெத்துகிறேன்
எனக்கொரு உறைவாள்
வேண்டுமென்று!

## தேநீர்

தேவைக்கும் தேகத்துக்கும்
புத்துணர்வின் ஒரு பங்கு
ஓயாது உழைப்பவரின்
உடம்பில் கால் பங்கு
சூட்டின் உணர்வோடு
சுவையடங்கும் நாக்கின்
தேவாமிர்த விருந்து என்றும்
தேநீர் சிலரின் மருந்து

## இயற்கை

மலர்ந்தும் விழுந்தும்
மக்கியே போகும் பூக்களின்
இடையே அதன் செடி மட்டும்
துவளாது துளிர்க்கையில்
வாழ்க்கையின் விவரம்
அறிய இயற்கையோர்
வேறு படைப்பு வேண்டுமோ!

- கனிமொழி சீனிவாசன்

# வெளி நாட்டு வேதனை (கொரோனா)



S.S. கார்த்திக்

கடன் வாங்கி கடல் கடந்து கட்டிடம் கட்ட ஆகாய விமானத்தில்
பறந்து வந்தோம் நாங்கள்
அயல்நாட்டிற்கு.....

சொந்தத்தை மறந்து தாய் தந்தையின் பாசத்தை இழந்து
பணம் என்னும் காகிதத்தை காண வந்தோம் அயல்நாட்டிற்கு....

வாரங்கள் ஓடின, மாதங்கள் மாறின, வருடங்கள் கடந்தன, வயதும் ஓடியது! ஆனால்
எங்களின் வாழ்க்கையின் மாற்றம் மட்டும்
மாறவில்லை....

காலையில் சூரியனுக்கு முன்பே எழுந்து கையில் ஒரு காபி -பையுடன் வாகனத்தில்
ஆரம்பிக்கும் எங்களின் அயல் நாட்டு வாழ்க்கை...

முதல் நாள் இரவு சமைத்த உணவை ஒரு பாக்கெட்டில் கட்டி மறுநாள் மதியம்
சாப்பிட்டு ஓடிக்கொண்டிருந்தது எங்களின் ஓட்டம்....

கட்டிய கடனை அடைக்கவேண்டும் என்ற கவலையோடு காலத்தை கடந்து
கொண்டிருக்கின்றோம் எங்களின் அயல் நாட்டு வாழ்கையில்...

எங்களின் வாழ்க்கையினை புரட்டி போட வந்தது கொரோனா (இணிதிடிஞீ-19)
என்னும் கொலைக்கார கொடிய நோய்...

ஒன்று பத்து என்று ஆரம்பித்து இன்று இலட்ச கணக்கில் ஆகிவிட்டது நோயின்
தாக்கம்...

வேலை இடங்களை மூடிவிட்டார்கள் வீட்டின் கதவுகளையும் மூடிவிட்டார்கள்
ஒரு அறைக்குள் வைத்து அடைத்துவிட்டார்கள்....

வெளி உலகத்தை காணாமல் நான்கு சுவற்றுக்குள் ஓடிக்கொண்டிருக்கின்றது எங்களின்
வினோத வாழ்க்கை...

வேலைக்கு சென்றால் கூட பத்து மணி நேரம் போய்விடும் ஆனால் 24 மணி நேரமும்
பூட்டிய அறைக்குள் வாழும் எங்களின் வாழ்க்கை நரகத்தின் உச்சம்...

உனக்கு என்ன வெளிநாட்டு வாழ்க்கை என்று வாயால் கூறிவிடலாம், ஆனால் எங்களின் மனவேதனை எங்களுக்கு மட்டுமே தெரியும்...

வாங்கிய கடனை எப்படி அடைப்பது
வைத்த நகையை எப்படி மீட்பது
வீடு எப்படி கட்டுவது
தங்கையின் திருமணத்தை
எப்படி நடத்துவது
என்று எங்களின் மனதில் பல போராட்டங்கள் ஓடிக் கொண்டே இருக்கின்றன...

நாங்களோ தனிமையில் வெளிநாட்டில் அடைபட்டு இருக்க எங்களை நினைத்து எங்களின் குடும்பங்களும் தவித்து கொண்டிருக்கின்றது தாய்நாட்டில்...
இதுதான் வெளிநாட்டு வாழ்க்கையின்
வேதனையா இறைவா...

இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் உயிர் பிழைத்தால் போதும் என்ற பேராசையும் நினைக்கின்றது இந்த பாழாய் போன மனது...

ஒர் அறைக்குள் உயிர் போராட்டம் நடந்துகொண்டுதான் இருக்கின்றது...
எங்களின் நிலை மாறுமா இல்லை இது தொடருமா என்ற பல கேள்விகளுடனே எங்களின் நாட்கள் நகர்ந்து கொண்டு இருக்கின்றது...

கவலையுடனும் கண்ணீருடனும்
கடல் கடந்து காத்து கொண்டிருக்கின்றோம் தாய்நாட்டை காண....

அன்புடன்,
S.S.கார்த்திக் DCA, DME
உள்ளிக்கோட்டை



# வாத்தியார் பேத்தி

பெண் பிள்ளைகள்
அப்பாவுக்கு மட்டும்
வரம் அல்ல,
ஒட்டுமொத்த
குடும்பத்திற்கே
குலவிளக்கு.
அதிலும் பாட்டனுக்கு
பேத்தி பெரும் சொத்து!...
நானும் அந்த வகையில் ஒருவரின்
சொத்து தான்...
வள்ளுவன் மகள் என்று சொல்வதை
விட,
சண்முக வாத்தியார் பேத்தி என்று தான்
என் அறிமுகம் இருக்கும்.
அவர் இருந்த வரை வாழ்வில் குறைகள்
கண்டதில்லை!...
தலைக்கு இரண்டு வகை எண்ணெய்,
வகை வகையாய் சோப்பு வாங்கி
வருவார்!..

எனக்கு நோட்டும் பேனாவும் வாங்கவே
பெரிய லிஸ்ட் போடுவார்!
அவர் போனபிறகு தான் என் அப்பாவுக்கு
அந்த பொறுப்புகள் கைமாறியது.
அரசு பள்ளி தலைமையாசிரியர், அரசு
ஆண்கள் விடுதி பாதுகாவலர்,
கலைஞரின் பெரும் ரசிகன், தமிழ்
ஆர்வலர் இப்படி பல அடையாளம்
அவருக்கு.. (ஊரில் சிலர் வார்டன் என்று
அவரை அழைப்பர்).
மன்னார்குடி காதிகிராப்ட்
பால்கோவாவும், பழனி ஆண்டவர் கடை
சர்பத்தும் அவர் வாடிக்கையாய் வாங்கி
வருவது.
ஐந்து பிள்ளைகளும் தான் தன் சொத்து
என்பார்..
அதனால்தான் ஐவருக்கும் தமிழில் பெயர்
சூட்டி முத்தாய் பாதுகாத்தார்!...

சைக்கிள் மிதித்து துளசேந்திரபுரம் பள்ளி
செல்வார்..

மாலையிலே வீடு திரும்பி நடந்தே
வயற்காடு செல்வார்..
ஆம் விவசாயத்தின் மீதும் காதல்
கொண்டவர்!...

பத்து வருடங்களுக்கு முன்பு
மண்ணுலகை விட்டு
மன்னவர் விண்ணுலகம் சென்றார்!..

அவர் இருந்த வரை இல்லாத கஷ்டங்கள்
இறந்த பின்பு
இருளாய் எங்களை சூழ்ந்தது..
வலிகள், சறுக்கல்கள் தான் கிடைத்த
வரமானது..

பல ஆண்டுகளுக்கு பிறகு ஆழ்ந்த
கனவில் அவரது முகம்!
அவரை பின் தொடர்ந்து நடக்கிறேன்!
ஏதோ ஒரு ஆபத்து அவரை நெருங்க
முற்படுகையில்
நான் பின்தொடர்ந்து காக்கிறேன்
அவரை!
விழித்த அந்த பொழுது விடிந்தது பெரும்
விடிவுகாலமாய்!
ஓரிரு நாட்களில் பல பல மாற்றங்கள்
நிகழ்ந்தது!
நான் பட்ட கஷ்டங்களுக்கான
நற்பலன்களை கண்கூடாய் கண்டேன்.

அன்று மீண்டும் உணர்ந்தேன் நான்
✸வாத்தியார் பேத்தி✸ என்று!..
இன்று தாத்தாவின் நினைவு தினம்
15/6/2020...

(இது கற்பனை அல்ல உண்மை)

- பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை.

# கோடு போட்டது கொரனா

ஓடித்திரிந்தே பழக்கப்பட்ட கால்கள் எல்லாம் கொரனாவால் ஓய்வெடுக்கின்றன. பழைய பழக்கங்கள் அழையா விருந்தாடியாக நம் வீட்டிற்க்கு வந்துள்ளன. மொட்டை மாடி தொட்டிரோஜா வாடிப்போய் அதன் நாடி இழந்திருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக உயிர்ப்பித்து துளிர்த்துள்ளது.

அனுதினமும் புதிய மாற்றங்களை அரங்கேற்றுகின்றது கெட்ட பழக்கங்களை புதைக்க புதைகுழியையும் உருவாக்கி புதைந்து போன நல்ல பழக்கங்களை மீட்டடுத்துள்ளது நம் வீட்டு மொட்டைமாடிக்கு நிலா தினமும்தான் வருகிறது. ஆனால் நாம் இப்பொழுதுதான் அதை பார்க்க வழி தேடுகிறோம். இதிகாச கதைகளை கேட்டால் இடித்தது போல் காதுகளை மூடிக்கொண்ட நாம்தான் இப்போது அதை செவிமடுத்து கேட்கிறோம்.

விளையாட மறந்த விளையாட்டுகளை விளையாடிதான் பார்க்கிறோம். நம் வீட்டு ஆடவரையும் அடுப்பபங்கரைக்கு அழைத்து சென்று இருக்கிறது.

வீட்டிலேயே நம்மை முடங்க வைத்தாலும் முடிந்துபோன நம் வாழ்க்கையின் முற்றுப்புள்ளியிலிருந்து ஒரு கோடு போட்டு கொடுத்திருக்கிறது. கொரனா ஆனால் பாதையை நாம்தான் அமைத்து கொள்ள வேண்டும்.

**- தர்ஷினி நாகூரான்**





ஓர் ஆன்மா இரண்டு உடல்கள்
ஓவியம்:
**ஆசிரியை ரோஸி**

## ஏழை முதியவர்
கணக்கு
கற்றுக்கொண்டார்...
பட்டினி கிடந்த
நாட்களை எண்ணி!

## இரை தேடி வந்த
எலி
இரையாகியிருந்தது...
ஒரு நாள்,
ஏழையின் வீட்டில்!

## மண்வீடு கட்டி
விளையாடிக்
கொண்டிருக்கிறான்...
சாலையோரங்களில்
படுத்துறங்கும்,
ஏழைச்சிறுவன்!

## பலத்த காற்று
இழுத்துச் செல்கிறது...
ஓட்டைக்குடிசையின்
நம்பிக்கையை!

## மழைபொழியும் போதெல்லாம்
நனைந்து
கொண்டே இருக்கிறான்...
விருப்பமில்லாமலே,
வீடில்லாதவன்!

## அம்மாவுக்கும் அப்பாவுக்கும்
சண்டை,
கோபித்துக்கொண்டு போகிறது...
குழந்தைகளின் மகிழ்ச்சி!

## ஏழைகளின் உலகம்
அழகாகவே இருக்கிறது...
பசி வரும் வரை!

## நத்தை கூட்டத்தை
கடக்கும் போதெல்லாம்
அதிகரிக்கிறது...
வீடில்லாதவனின் வேதனைகள்!



- மு.முபாரக்
எழுத்தர்,
எண் 273 வாளாடி கூட்டுறவு வங்கி,
வாளாடி,
இலால்குடி வட்டம்,
திருச்சி மாவட்டம்,
அஞ்சல் இலக்கம்: 621218
அலைபேசி: 8072600090

# இறைவன்

இறைவன் என்பது கற்சிலையா? இயற்கையா? ஒளிவடிவமா? கண்களுக்கு புலப்படாத ஒன்றா, இவற்றில் எது? நாம் ஒவ்வொருவரும் வெற்றியடைந்தால் கடவுள் ஆசிர்வாதத்தால் நடந்தது என்று பரவசமடைகிறோம். அதே தோல்வியடைந்தால் கடவுளுக்கு என் மேல் கருணை இல்லை என்றும், கல்லா நீ! சக்தியே உனக்கு இல்லையா? என்னை மட்டும் தான் சோதிப்பாயா? என்று சொல்கின்றோம். இது தான் மனித இயல்பு.

நமது அறிவுத்திறன் தான் கடவுள். உடனே எவ்வளவு படித்திருக்கிறோமோ அவ்வளவு புத்திசாலி என்று நினைக்க வேண்டாம். எதைப்பற்றி படித்திருக்கிறீர்களோ அதைப்பற்றி மட்டும் தான் உங்களுக்கு தெரியும். நாம் ஒவ்வொருவரும் செய்யும் தவறு அது தான். மருத்துவர், பொறியாளர், விஞ்ஞானி, ஓட்டுநர், தையல்கலைஞர், தச்சர், விவசாயி என இத்தனை தொழில் செய்பவர்களுமே நம்மைப்பற்றியும் நமக்கு தெரிந்ததை மட்டுமே வைத்துக்கொண்டு வாழ்க்கையை வழிநடத்தும் பொழுது தான் பிரச்சனைகளை எதிர்கொள்கிறோம். வெறுந்தொழில் செய்பவருக்கும்  நம் தொழிலில் ஏற்படும் பிரச்சனை போல் தான் இருக்கும்.

அடிப்படையிலிருந்து தான் நாம் ஒவ்வொருவரும் வளர்ந்து ஒரு நிலைக்கு வருகிறோம். வளர்கிறவர்களை, வளர்ந்தவர்கள் வளர்த்துவிடுங்கள், அறிவை பட்டைதீட்டுங்கள். புத்திகூர்மையாக உறவுகளையும் தொழில்களையும் கவனத்தில் கொண்டால் வெற்றி நிச்சயம். நீங்கள் கடந்து வந்த வாழ்க்கையை சிறிது நேரம் சிந்தியுங்கள். எவ்வளவு கஷ்டங்கள், துன்பங்கள் அவமானங்கள் சந்தித்து இருப்பீர்கள். இவை அனைத்தும் உங்களின் இயலாமையின் காரணம், அப்போது அந்த சூழ்நிலையில் நீங்கள் செய்தது சரி என்று நினைத்திருப்பீர்கள். ஆனால் இப்படி செய்திருந்தால் அது நடந்திருக்காது, அதனை அப்படியெல்லாம் செய்திருக்கலாம் என்றெல்லாம் தோன்றும். காரணம், ஒரு நிகழ்வு நடக்கும் பொழுது பயம், பதட்டம் நம்மை முட்டாளாக்கும். நிதானம் சிந்திக்க வைக்கும். அறிவை பயன்படுத்தும் எந்த செயலாக இருந்தாலும் சிந்தை சிதறாமல் மனதை ஒருநிலைப்படுத்தி தன்னைமட்டும் நினைத்து சுயநலமாக யோசித்தால் தோல்வி தான் கிடைக்கும். பொதுநலத்தோடு செயல்பட்டால் வெற்றி நிச்சயம். அறிவும் அன்பும் எங்கு செயல்படுகிறதோ அங்கு இறைவன் என்ற சொல் உயிர்பெறுகிறது.



நன்றி,

கற்பகம் ஆசிரியை,
அம்மாபேட்டை

# ஒளிரும் ஆசிரியர் பகுதி - 8

## மாணவர்களை நேசிக்கும் ஆசிரியர்களின் ஆசிரியர்



அண்மையில் உலகம் முழுவதும் பேரிடரை விளைவித்து வரும் தீநுண்மி - 19 இலிருந்து மக்கள் விடுபடும் நாள் எந்நாளோ? தெரியவில்லை. ஒவ்வொருவரும் இக்கொடும் நோய்த்தொற்றுப் பீடிப்பதிலிருந்து தப்பிக்க தங்கள் இன்னுயிரைக் கையில் பிடித்துக்கொண்டு உழலும் அவலம் கொடுமையானது. இக்கொடிய சூழலில் அதிகம் பாதிக்கப்பட்ட பிரிவினராக மாணவச் சமுதாயம் காணப்படுகிறது. ஒரு நாட்டின் வளமும் நம்பிக்கையும் மாணவர்களே ஆவர். கல்வி இனி செல்ல வேண்டிய பாதை அடர்ந்த இருள்வெளியாக இருப்பது கண்கூடு.

இத்தகு கடின சூழலில் இணையவழியிலான கற்றல் மற்றும் கற்பித்தல் வகுப்புகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. மாறிவரும் புதிய சூழலுக்கு ஆசிரியச் சமூகத்தைப் பழக்கவும் இயற்கைப் பேரிடரைத் திறம்படக் கையாளும் ஆளுமையை அடையவும் பயிற்சிகள் இன்றியமையாதவை. பயிற்சிகளின் குறிக்கோள்கள் முழுமையடைய சுய முயற்சி அவசியம். ஆசிரியர்களிடையே இதனைத் தூண்டித் துலங்க செய்ய தன்னலம் கருதாத முன்மாதிரிகள் ஒரு சிலர் தேவைப்படுகின்றனர். இத்தகையோரில் பலர் தம் மேல் பேரொளி ஒன்றை செயற்கையாகப் பரவ விட்டுக்கொண்டு பள்ளிப் பிள்ளைகள் மற்றும் சமூகத்தின்மேல் அக்கறைக் துளியுமின்றி தம்பட்டம் அடித்துக்



கொண்டு திரியும் கும்பலில் ஆட்படாமல் அகப்படாமல் பிறர் நலம் காப்பதையே முழுமூச்சாகக் கொண்டு விளங்கும் தூண்டுகோல்கள் மிக சொற்பம்.



அந்த வகையில் மன்னையின் மைந்தராகப் பிறந்து தற்போது செங்கல்பட்டு மாவட்டத்தில் சிங்கபெருமாள்கோவிலில் வசித்துக்கொண்டு கருநிலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் இடைநிலை ஆசிரியரும் முனைவருமான ப. இரமேஷ் என்பவர் தனித்துவமானவர். இவரை ஆசிரியர்களின் ஆசிரியர் என்று அழைப்பது சாலப் பொருத்தம். நாம் அறிந்து வைத்திருக்கும் இவர் போன்ற பல ஆளுமைகள் ஆசிரியர் மற்றும் அலுவலர்கள் இதயங்களில் மட்டும் வீற்றிருந்தால் போதாது. பிஞ்சு உள்ளங்களில் நெஞ்சங்களில் நீங்காமல் நிறைந்திருப்பது இன்றியமையாதது அல்லவா? ஊர்க்குருவி உயரப் பறந்தாலும் சின்னஞ்சிறு கிளையில் அதற்காகவே இருக்கும் குட்டிக்கூடு மிக முக்கியம். அதுபோல் தான் ஒவ்வொரு ஆசிரியருக்கும் அவருக்கென்று தவமிருக்கும் பள்ளிப் பிள்ளைகளின் கல்வி நலன் மிக முக்கியம். அந்த வகையில் இவர் ஆசிரிய இனத்திற்கு மட்டுமல்ல மாணவ சமுதாயத்திற்கும் பெரிய கொடுப்பினை. இவர் வகுப்பில் பயிலும் அனைத்து தொடக்கநிலை மாணவர்களும் முழுமையாகத் தமிழ் மற்றும் ஆங்கிலம் வாசிக்க தொடர்ந்து பயிற்சி அளித்தன் விளைவாக வாசிக்கக் கற்றுக் கொண்டுள்ளனர். ஒவ்வொரு வகுப்பிலும் ஆசிரியர்கள் அனைவருக்கும் அறைகூவலாக இருப்போர் மெல்லக் கற்கும் மாணவர்கள்தான். அவர்களையும் கல்வியில் முழுமையடைய வைப்பதே ஒரு சிறந்த ஆசிரியரின் கடமையாகும்.

அத்தகு, மெல்லக் கற்கும் மாணவர்களை வாசிக்க வைப்பதற்கு தொழில்நுட்ப உலகில் அனைத்துக் குழந்தைகளும் விரும்பும் செல்பேசி, கைக்கணிணி, மேசைக்கணிணி ஆகியவற்றைப் பயன்படுத்தி தமிழ், ஆங்கில எழுத்துக்கள் வாசிக்கத் தெரியாத மாணவர்களுக்கும் விளையாட்டு முறையில் பல்வேறு செயலிகள் மூலம், எழுத்துக்களை வாசிக்கவும் உச்சரிக்கவும் கற்றுத்தருவது வாடிக்கை. ஆங்கில வாசிப்பிற்கு ஒன் நோட் (One Note) இல் காணப்படும் ஆழ் வாசிப்பு



(Immersive Reader) மற்றும் குழுக்கற்றலை மேம்படுத்த பகுப்புமுறை (SPLITTER METHOD) மென்பொருள்களை ஏழை எளிய மாணவர்களிடம் அறிமுகம் செய்து வைத்து கற்றலை மேம்படுத்தியது அனைவரின் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஊருக்கு வெளியே ஏரிக்கரை ஓரமாக பல குடிசைகளில் தங்கி இருந்த பழங்குடியின மக்களின் பள்ளி செல்லாக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க எடுத்த முயற்சியின் விளைவாக 15 பேர் பள்ளியில் புதிதாகச் சேர்க்கப்பட்டனர். அடுத்ததாக, பள்ளியின் வகுப்பறைச் சூழலை மாற்றியமைக்க வேண்டும் என்ற கனவுகளோடு வேல்ட் விஷன் நிறுவனத்தை அணுகிக் கேட்டதன் விளைவாக இரண்டரை இலட்சம் நிதியுதவியில் கனவினை நனவாக்கிக் கொண்டது சிறப்பு.




தமிழ்நாடு டிஜிட்டல் டீம் என்ற வாட்சப் குழு மூலமாக கொரோனா கால ஊரடங்கில் வீட்டில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில் ஜூம் ஆப் வழியாக ICT (கணினி தொழில்நுட்பம்) ஆன்லைன் பயிற்சியை ஏப்ரல் மாதம் 01.04.2020 முதல் 13.04.2020 வரை 13 நாட்கள் ஆசிரியர்களுக்கு இலவச ஆன்லைன் பயிற்சி வழங்கியதும் இந்த பயிற்சியில் 27 தலைப்புகளில் 27 வகுப்புகள் 25 கருத்தாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளித்ததும் ஒரு வகுப்புக்கு 100 ஆசிரியர்கள் வீதம் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு மாவட்ட ஆசிரியர்கள் 2700 பேர் இந்த பயிற்சியின் வாயிலாக தொழில்நுட்பம் சார்ந்த பாட கருத்துக்களைக் கற்றுப் பயன் அடைந்ததும் ஒரு மைல்கல் எனலாம். பின்னர் 20.04.2020 முதல் 22.04.2020 வரை மூன்று நாட்கள் 3 வகுப்புகள், மைக்ரோசாப்ட் மென்பொருள் கருவிகள் மூலம் வகுப்பறை கற்பித்தல் என்னும் தலைப்பில் வழங்கிய பயிற்சியில் 500 ஆசிரியர்கள் பயன்பெற்றது அறியத்தக்கது.

மூன்றாம் கட்டமாக மே மாதம் 08.05.2020 முதல் 17.05.2020 வரை 10 நாட்கள் மைக்ரோசாப்ட் டீம்ஸ் (Microsoft Teams Application) செயலி வழியாக வழங்கப்பட்ட பயிற்சியில் முதல் நான்கு நாட்கள் TNTP, DHIKSHA, E LEARN முதலான கற்றல் கற்பித்தல் வள வலைத்தளங்களில் ஆசிரியர்கள் எவ்வாறு பயன்படுத்துவது, எப்படி

பங்களிப்பு செய்வது என்பது குறித்தும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதன்பின், பாடங்களை எவ்வாறு மின் பாடப்பொருள் (e-Content) காணொலியாகத் தயாரிப்பது, வகுப்பறையில் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்திப் பாடங்களை எவ்வாறு கற்பிப்பது என்பது குறித்தும் பயிற்சிகள் இவரால் நடத்தப்பெற்றன. இந்த பயிற்சியில் 2000 ஆசிரியர்கள் பயன்பெற்றனர். மொத்தமாக 26 நாட்களில் 50 இணையவழிப் பயிற்சி வகுப்புகள் இவரது ஒருங்கிணைப்பில் பல்வேறு கருத்தாளர் பெருமக்களின் உதவியோடு நடைபெற்றதும் பயிற்சியில் பங்குபெற்ற அனைவருக்கும் மின் சான்றிதழ் (e-Certificate) வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்களைப் பணி சார்ந்து வளப்படுத்துவது என்பது காலத்தின் கட்டாயம். மாறிவரும் புதிய புதிய மாற்றங்களுக்கேற்ப தம்மைத் தகவமைத்துக் கொள்ளும் ஆசிரியப் பெருமக்கள் மாணவர்களுக்குக் கிடைத்த வரம் ஆகும். அதற்கு திறன்மிகு பயிற்சியும் தன்னார்வ முயற்சியும் உரம் எனலாம். நண்பர் இரமேஷ் தம் அயராத முயற்சியினால் நாடு முழுவதிலும் உள்ள ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகவும் ஏழை, எளிய, பழங்குடியின மாணவர்களின் இருண்ட வாழ்க்கையில் ஒளிரும் ஆசிரியராகவும் விளங்கி வருவது பெருமையாகும்.



- முனைவர் மணி கணேசன்

# பூக்களை எரிக்காதீர்கள் !!



கருவான என்னை உருவாகாமல்
நான் என்பதால் கலைத்தீர்கள் !

உருவாகி வந்த என்னை
நான் என்பதால் கள்ளிப்பால் மூலம்
என்னை கிள்ளி எறிந்தீர்கள் !

மொட்டு என்று பாரமால் நான்
என்பதால் என்னை
உங்கள் காமப்பசிக்கு சிதைத்தீர்கள்!!

வீட்டுச் சுமை குறைக்க
வேலைக்கு செல்லும் என்னை
நான் என்பதால் தவறாக
நடந்து கொண்டீர்கள் !

பேருந்தில் பயணம் செய்த என்னை
நான் என்பதால் தங்கள்
சுகத்திற்கு என்னை இடித்தீர்கள் !

இடிக்க நினைக்கும் என்னை நான்
என்பதால் பணம் இல்லமால்
யாரும் கட்ட மறுக்கிறீர்கள் !!

கட்டியபிறகும் நான் என்பதால்
பணத்தாசையில் என்னை
கொடுமைப்படுத்தினீர்கள்!!

நான் என்பதால் காதலித்து
ஏமாற்றினீர்கள்!!

திருமணம் செய்தும் ஏமாற்றுகிறீர்கள்!!

உங்கள் தவறை மறைக்க தாய்மை
அடைய முடியாத என்னை
நான் என்பதால் மலடி
என்று பழி தூற்றுகிறீர்கள் !

இரவில் வெளியே வந்தால்
நான் என்பதால் என்னை அரக்கர்கள்
நீங்கள்
பலாத்காரம் செய்தீர்கள்!

இப்போது
யார் மீதோ உள்ள உங்களுக்கு உள்ள
முன்விரோதம் காரணமாக பூவாகிய
என்னை நான் என்பதால்
என்னை எரித்து கொள்கிறீர்கள் !

நான் பெண்ணாக பிறந்தது என்
குற்றமா??..

பூக்களை மலர விடுங்கள்!!!

--

**விக்னேசுவரி இராமசாமி,**
சுந்தம்பட்டி



# மாற்றங்களை எதிர்நோக்கி

பழைய நிலைக்குத் திரும்புதே
புதிய இதயம் விரும்புதே...
விடிந்ததை அறியாமல் சிற்றுண்டியை
மறந்து
மதிய உணவு பசியெடுத்துக் கண்
விழித்தது போக...
சுடசுட காப்பியுடன்
சூரிய உதயத்தைக் காண
காத்திருக்கிறது மக்கள் கூட்டம்!!
வெந்ததை வேண்டா வெறுப்பாய்
உண்டு
வேலைக்குப் போன காலம் போக...
மொறு மொறுவென தோசையைத்
தட்டில் அடுக்கி, வழியனுப்பி
வைக்கிறாள், அம்மா

வீட்டிலிருந்தே வேலை!!
தாமாக தேநீர் வைக்க வந்த கணவன்
வியர்வையில் குளிக்க...
எண்ண அலைகளோ,
தாயையும் தாரத்தையும் நோக்கிச்
சென்றது...
நாள் முழுதும் அனலில்
தவிக்கிறார்களே என்று
தன் சமையல் கலையைத் தோண்டும்
ஆண்கள் கூட்டம்!!
கேலி சித்திரங்கள் அனைத்தும்
சலித்துப் போக,
தாத்தா பாட்டியின் விரல் பிடித்து
விளையாடி மகிழ்கிறது
சிறார் கூட்டம்!!
பல்கடை அங்காடி மட்டுமே
என எண்ணியவர்கள்
பட்டம் விட்டும், பல்லாங்குழி ஆடியும்
பொழுதைப் போக்கிறது
இளைஞர் கூட்டம்!!
இப்படியே இருந்துவிட கூடாதா என
தோன்றும் இதயங்கள்...
ஆனால்
இப்படியே இறந்துவிட கூடாது என
பல கனத்த இதயங்கள்

எதிர்ப்புகளை வெளிப்படையாய்
தெரிவிக்க அறிந்தவர்கள்..,
எதிர்ப்புசக்தியை வளர்க்க அறியாமல்
கொத்து கொத்தாய் சடலங்களை
எடுத்துச் செல்கிறனர்....
தினக்கூலியின் பாடோ
பெரும் திண்டாட்டம் தான்...
ஒருவேளை சோற்றிற்கு ஒவ்வொரு
வேளையும்
வழி மேல் விழி வைத்துக்
காத்திருக்கிறது
ஓர் அப்பாவிக் கூட்டம்..!!
விவசாயியோ விளைச்சலும் போச்சு
விலையும் போச்சு என
கதறுகின்றனர்.!!
வாடி வதங்கி நோகும்
பூக்காரியின் குடும்பம்!!
பாலாய் போகிறது
வியாபாரியின் வடிகாலில்..!!
இம்முறை தவறாமல் உன்னைப்
பார்க்க வருவேன் என்று கூறிய
பிள்ளைகளுக்காக எதிர்பார்த்துக்
காத்திருக்கும் முதியோர் இல்லம்..!!
வெளிநாட்டு மகன் மகளின்
நினைவுகளோடு தனிமையில்
தவிக்கும் பெற்றோர்கள்...!!

கிழவி இறந்ததை அறியாமல்
உணவுக் கொடுக்கும்
உன்னத கிழவன்(கணவன்)..!!
ஊரே அடங்கிருக்க, பழிவாங்கும்

எண்ணம் அடங்காமல்...
குற்ற உணர்வின்றி குழந்தையைக்
கொன்ற மூடர்கள்...!!

கொடூரங்களைக் கேட்கக் கேட்க
இறுகிறது இதயம்..!

காரணம் யாரோ என்று
சிந்திக்கையில்..,

பாரம் தாங்காமல்
சுவாசிக்க முடியாமல் திணறுகிறேன்...

என்னைத் துளைத்தும் இடித்தும்
நோகடிக்கிறார்கள்... காப்பாற்றுங்கள்...
என பூமித்தாய்
மன்றாடியிருப்பாளோ...?
இருந்திருக்கக்கூடும்...!

நாமோ இயற்கையை மறந்து
செயற்கையோடு செயற்கையான
வாழ்வை வாழ்ந்து
கொண்டிருந்தோம்...!

நிழலாக கைப்பேசி இருக்கின்றது
நிழல் தரும் மரங்கள் இல்லை...!

நெகிழி குப்பியில் தண்ணீர்
இருக்கின்றது
நெஞ்சம் நெகிழ ஆறுகள் இல்லை...!

கேட்டு மகிழ மெல்லிசை மன்னன்
பாடல் இருக்கின்றது
கூவி மகிழ சின்ன வர்ண குருவி
இல்லை...!
நிற்காமல் செல்ல நெடுஞ்சாலை
இருக்கின்றது
நடந்து செல்ல வயல்வெளிகள்
இல்லை..!

உடனுக்குடன் செய்வதற்கு செயலி
இருக்கின்றது,
மனிதமுடன் செயல்படும் மனிதர்கள்
இல்லை...!

இந்த மாற்றங்களை மாற்ற
நம்மை மாற்றுங்கள்!!

எண்ணங்களை மாற்றுங்கள்...!

இயற்கை அன்னையைக் காக்க
மீண்டும்
ஓர் அரிய வாய்ப்பு...!!!

அன்னையை மீட்டெடுக்க
மாறுவோம்..!! மாற்றுவோம்..!!

- நித்யா சம்பத்



# புளியமரம்

ஊரின் சுடுகாட்டுப் பாதையிலிருக்கும்
இளையவயதின் பேய்மரம் என்றாலும்
பூப்பூத்துப் பிஞ்சியேரத்துவங்கினால்
சிறாரின் கூட்டம் மொத்தமும்
தேனீக்களாகி சுற்றிக்கிடக்கும்
கைநிறைய உப்போடும்
கொஞ்சமாய் மிளகாய் தூளோடும்
புளியமரங்களைச்சுற்றி ...

புளியங்காய் பறித்துத்தரும்
தன்சோட்டுப் பையன்களோடு
சிநேகித்துக் கிடக்கும்
கபடமில்லா பெண்கள்
நெடுஞ்சாலை விரிவாக்கத்தில்
மாய்ந்துபோன புளியமரங்களாய்
காணாமல் போய்விட்டனர்
பட்டிக்காட்டிலும் ....

உச்சிமுடியறுத்து ஆணியில் சுற்றி
அறையப்பட்டிருக்கும் பேய்களை
ஒருவரும் கண்டதில்லை இதுவரை
ஏசுநாதரைப்போல வலிகளைத்தாங்கி
ஊர்ப்பஞ்சாயத்தில்
ஏலம் விடும்போதெல்லாம்
மவுசுகூடி உயிர்த்தெழுகின்றன
குளக்கரை ஏரிக்கரை மற்றும்
சாலையோர புறம்போக்கு
புளியமரங்கள்...

ஆடுமாடு மேய்ப்பவர்கள்
வழிப்போக்கர்கள்
வயதானவர்கள்
சுமைத்தூக்கிகள் என
அனைவரையும் இளைப்பாற்றும்
கோடைக்கால பெருநிழல் போதியாய்
திகழினும்
சுடுகாட்டு ஈமவிறகாய் மடிவது
யார் விடுத்த சாபம் புளியமரத்துக்கு ...

புளியமரத்திலிருந்து விழுந்து
கால் உடைந்துவிட்டது
புளியமத்தாண்ட மாட்டுக்கு
லாடம் கட்டறங்கா
புளியமரத்தோப்புல ஓம்புள்ள
சீட்டாடுறான்
புளியமரத்தாண்ட நான்வருவன்
நீயும் வந்திடு
புளியமரப் பொந்துல புடிச்சாந்த கிளி
அந்தப் புளியமரத்துப்பழம் மட்டும்
தேனா இனிக்குது எனக்கு ஒன்னுத்தா
புளியமரத்தாண்ட பன்னி அறுக்கிறாங்க
புளியமரத்துப்பக்கம் போவாத
புடிச்சாலும் புளியஞ்சிம்பா புடிக்கனும்
புளியங்கொட்ட இருக்கா
புளியங்கொட்ட
புளியங்கொளத்துல மீன்புடிக்கிறாங்க
என்ற பேச்செல்லாம்
காணாமல்போய்விட்டன
செங்கல் சூலை மளமளவென்று
பெருகிப்போன எங்களூரிலும்
உங்கள் ஊரிலும்...

புளியங்கொட்டைகளால்
ஒத்தையா இரட்டையா விளையாடியதும்
புளியங்கொட்டையை வறுத்து
வேய்த்துத் தின்றதும்
புளியம்பழத்தில் வெள்ளாட்டு
பால்பீழ்ச்சி
தயிர் திரித்துச் சுவைத்ததும்
புளியங்கொட்டைகளைத் தேய்த்துத்
தாயம் விளையாடியதும்
இறுதித் தலைமுறை நாம்
இனி வரும் தலைமுறைக்கும்
வரங்களாய் நல்கிட
புளியமரங்களைப் புணரமைப்போம்!

---

பொன். தெய்வா

# முத்தம்மாளும் வேலம்மாளும்

கீழத்தெரு முனுசாமி
கெங்கம்மாளோடு கெரக்கமாகி
சாதிசெனம் சேர்த்துவச்சு
வேதனையில் பெத்தமக வேலம்மாள்
மேலத்தெரு இரங்கசாமி
ஆண்டாளோடு அன்பாகி
அம்மி மிதிச்சி அருந்ததி பார்க்க
முகூர்த்தம் கூடி ஜனித்தமக
முத்தம்மாள்

கருமேக நிறக்காரி
காக்கா முட்டை கண்ணுக்காரி
தெருமண்ணில் விளையாடி
தேகமெல்லாம் அழுக்கேறி
சளிமூக்கு மூஞ்சோடு
சண்டைசெய்யும் ஆங்காரி
தன்சோட்டு பசங்களோடு
தாராளமாய் வளையவந்து
ஊராகாளி பேரெடுத்த
ஒன்றுமறியா உள்ளக்காரி வேலம்மாள்

செக்க செவந்தவளாம்
செவ்வாழை மரமழகாம்
தெருமண்ணு பார்க்காத
தேவதைங்க பாதத்தாளாம்
இலவம்பஞ்சி மெத்தையில
இளைப்பாறும் பொன்மேனி
பரமபதம் பல்லாங்குழி
கண்ணாமூச்சி ஐந்தாங்கல்லு
அத்தையோடும் சித்தியோடும்
கற்றுத்தேர்ந்த செல்லக்காரி
முத்தம்மாள்

மேலத்தெரு அதிகாரம்
கீழத்தெரு அடிமைத்தனம்
ஒருமைப்பாடு கண்டயிடம்
ஊராட்சி துவக்கப்பள்ளி
எத்தனையோ சண்டையிலும்
ஏதுமாகா அறிவுக்கோயில்
சுத்திநிற்கும் பகையாவும்
சூன்யமாகும் போதிபீடம்

பட்டுப் பாவாடை  சட்டை
பைநிறைய இனிப்போடு
சிலெட்டு பல்பம் தாங்கி
சிங்காரிச்ச அழகோட முத்தம்மாவும்
கிழிஞ்ச பாவாடை சட்டை
கேழ்வரகு மல்லாட்டை
கரிப்பூசிய பலகை தாங்கி
சிரிச்ச மொகத்தோட வேலம்மாளும்
ஐந்தாறு அகவையில
ஐக்கியம் ஆனயிடம்
அன்பறிவு தழைக்குமிடம்
ஆரம்பப் பள்ளியாகும்

பத்துப்புள்ள மேலத்தெரு
மூனுபுள்ள கீழத்தெரு
உட்காரும் இடந்துவங்கி
எழுதுவது பேசுவது
ஆடுவது பாடுவது
பத்துல இரண்டுகுழு களிப்பாக
கீழத்தெரு மூன்றுநபர் தனியாக....

ஆடாத ஆட்டமெல்லாம்
ஆடித்திரிஞ்ச வேலம்மா
கூடியாட ஆட்களன்றி
குமுறியழுத வேளையில
கருத்த கரம்புடிச்சி
கன்னங்கீறும் நீர்த்தொடச்சி
விளையாட்டில் சேர்த்தாளே
விழிப்பூக்க செய்தாளே
வெளுத்த மனசுக்காரி
முத்தம்மாள்  வேலம்மாளை!

அன்றுமுதல் இருவருக்கும்
ஆனந்தத்தில் பஞ்சமில்லை

அப்பன் ஆத்தா சொல்வதெல்லாம்
ஆறறிவில் ஏறவில்லை
மேலத்தெரு வீதியில
பாதம்தொடும் வேலம்மாவும்
கீழத்தெரு புழுதிமண்ணை
காலில்பூசும் முத்தமாவும்
இன்றுவரை வாழறங்கா
இன்பநட்பில் மூழ்குறாங்க

வாழுமிடம் வேறுவேறு
வரையறைகள் ஐம்பதுநூறு
சதிகாரர் விதித்தநெறி
சாக்கடையில் தூக்கியெறி
வேலம்மாளும் முத்தம்மாளும்
வேற்றுமையைக் களைந்ததைப்போல்
நாடெல்லாம் ஒற்றுமையால்
கூடிவாழும் கொள்கைகளை
ஆடிப்பாடி செதுக்கு உளி
ஆண்டவனும் திளைப்பான் துள்ளி!



பொன். தெய்வா
ஐவேலி, விழுப்புரம் மாவட்டம்.

---



சூரியா
இளங்கலை முதலாம் ஆண்டு
வடுவூர்.



சுபஸ்ரீ விஸ்வலிங்கம்

# இதுவும் பலரின் மனக்குமுறலே!!

பணி கேட்டு சென்றால்
பணம் கட்டு என்றான் ..

தரம் தாழ்ந்த பணி தந்து
என் பொறியியல் படிப்பையே
கொன்றான்..

நலம் பயக்குமெண்ணி
படிக்கவைத்தது
அவர்கள் தவறா..?

படிப்பிற்கேற்ற பணி தேடி
அலைவது தான் என் தவறா..?

வாய்ப்பு கிட்டியும்
தக்கவைக்க
தடைபோட்டது விதியா..?

வினாக்குரிய விடையளித்தும்
விலக்கப்பட்டது,
எதிர் நின்றவனின் சதியா..?

மனதில் பாரமும்,
வாழ்வில் வெறுமையும்
கூடியிருக்கிறது இங்கே..

கவலை வேண்டாம்
நான் இருக்கேன் என்று
கூறியவர்கள் எங்கே..?

# கிருமிகள் சூழ் உலகு!


செந்தில் பக்கிரிசாமி
மன்னை

Covid 19 கொரோனா கிருமியால இப்ப ஊரே பயத்தோட இருக்கு. எங்க பாத்தாலும் பரவுது. பல உயிர் இழப்புகள். இது எங்க போய் முடியும்ன்னு யாருக்கும் புரியல. இந்த சீனப் பயபுள்ளக என்ன வேலை பாத்துபுட்டு. நல்லா இருந்த உலகத்தை இப்படி ஒரு கிருமியை பரப்பி விட்டுட்டு நாசமா ஆக்கிடான்னுங்களேன்னு எல்லாருக்கும் செம காண்டு ஆகி இருக்கும். உலகமே சீனா மேலே செம கடுப்புல இருக்கு. இதுல இந்தியாவுக்கு எல்லை பிரச்சினை வேற. அதுல இன்னும் அதிக கடுப்பு. இந்த கிருமிங்க தொல்லை தாங்க முடியல, இதை எப்படியாவது அழிக்கனும்ன்னு நம்ம எல்லாருக்கும் தோணும்.

ஆனால் இந்த உலகத்தில உயிரைக்கொல்லும் கிருமிகள் மட்டும் அல்ல. உயிர் காக்கும் எண்ணற்ற நுண்ணுயிர்கள் கூட உள்ளன. இந்த உலகமே கிருமிகள் சூழ் உலகம் தான்.

உடலில் நுழைந்து நோய்களை உருவாக்கும் நுண்ணுயிரிகள், கிருமிகள் என்னும் பொதுப்பெயரால் சுட்டப்படுகின்றன. கிருமிகளின் இயல்பைப் பொறுத்து அவை இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு வகை பாக்டீரியா, இன்னொரு வகை வைரஸ்.

நுண்ணுயிருக்கும் கிருமிகளுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில்

Bacteria - நுண்ணுயிர் - ஒரு உயிரணு உள்ளது.
Virus - கிருமி - உயிரணு இல்லாதது. இது அட்டை போல் உயிரணுவில் ஒட்டி கொண்டே அதன் வேலையை செய்ய முடியும். மிகவும் ஆபத்தை விளைவிக்க கூடியது.

மனிதர்களை பொறுத்தவரை, நன்மை செய்யும் பாக்டீரியாக்களும் உள்ளன, தீமை செய்பவையும் உள்ளன. நன்மை செய்யும் சில பாக்டீரியாக்கள், ஒரு குறிப்பிட்ட அளவை விட அதிகமாக உடலில் பெருகிவிட்டால், அவற்றின் செயல்பாடு நோய்களாக வெளிப்படுவதும் உண்டு. இந்த பாக்டீரியாக்கள் நுண்ணுயிர்கள் இல்லாத இடமே இல்லை என்று சொல்லலாம். ஏன் நம் எல்லாருக்குல்லயும் இருக்கு. உண்மையை சொல்லணும்னா நம்மை வாழ வைப்பது அவைகள் தான். இந்த உலகத்தின் மறுசுழற்சிக்கு அவற்றின் பங்கு முக்கியம். அப்படி இயற்கையிலேயே உள்ள நுண்ணுயிர்களால் நடக்கும் சில மாறுதல்கள் பற்றி இந்த பதிவில் பார்ப்போம்.

நுண்ணுயிர்கள் என்பது நாம் பிறந்தது முதல் இறப்பது வரை எண்ணற்ற அளவில் நம் உடலிலேயே இருக்கும். நம் மூக்கு, வாய் என பரவி இருக்கும். இதே போல் வைரஸ் கிருமிகள் நம்மை தாக்கும் போது அவைகளும் அதே போல் இருக்கும். இதனால் தான் ஒருவருக்கு வரும் நோய் வாய் மூக்கு வழியாக அவர்கள் கைகளுக்கு பரவி அடுத்தவரை தொடும் போது பரவுகிறது. தற்போதைய சூழலில் முகக்கவசம் போட காரணம் அது தான்.

நம் உடலில் உள்ள நுண்ணுயிர்களை ஆங்கிலத்தில் பாக்டீரியா என்பார்கள் இவைகள்தான் நம் உடலில் நாம் உண்ணும் உணவு செரிப்பதற்கும், நம் உடலை வைரஸ் கிருமிகள் வெளியிலிருந்து தாக்கும்போது அவைகளோடு சண்டையிட்டு நம் உடலை காப்பதற்கும் உதவுகிறது.

மனிதர்களின் நோய்களைப் பொறுத்தவரையில், பாக்டீரியாவுக்கும் வைரஸ்க்கும் இடையேயான முக்கியமான வேறுபாடு, ஆன்டிபயாடிக்ஸ் என்னும் எதிர்உயிரிகள் பாக்டீரியாவினால் ஏற்படும் நோய்களை மட்டுமே குணப்படுத்த முடியுமாம்.

ஆன்டிபயாடிக்ஸ்னால் வைரஸை அழிக்க முடியாதாம்.

இப்படி நாம உயிரோடு இருக்கும்போது நமக்கு காவலாக இருக்கும் இந்த நுண்ணுயிர்க்கிருமிகள் தான் நாம் செத்தபிறகு நம்மை சிதைத்து மட்க வைத்து மறு சுழற்சி செய்ய உதவுகின்றன.

நாம் உயிரோடு இருக்கும் போது நமக்குள்ள வாழும் இவை, நாம் இறந்த பின் அதுவரை நம் உடலில் உள்ள சத்துக்களில் வாழ்ந்த அவைகள் அதன் பின் தான் உயிர் வாழ நம் உடலில் உள்ள திட திரவ பொருட்களை உண்டு வாயு வாக மாற்றி ஒரு துர் நாற்றதோடு வெளியேறுகின்றன. இதனால் தான் இறந்தவர் வாயையும் மூக்கையும் அடைத்து விடுகிறார்கள், வாயு நிலையில் வெளி வரும் அதில் உடலுக்கு கேடு விளைவிக்கும் வேதிப்பொருட்கள் உண்டு. நம்மை தாக்காமல் இருக்க.பின் இந்த துர்நாற்ற வாயுவானது ஈக்கள் மற்றும் வண்டுபூச்சிகளை (beetle) கவர்ந்து இழுக்கிறது ஏறக்குறைய ஒரு சிக்னல் போல. உடனே ஈக்கள் உடலை நோக்கி வந்து விடுகின்றன. உடலை மொய்த்து அங்கேயே நமக்கு நல்ல இடம் கிடைத்து விட்டது என்ற மகிழ்ச்சியில் இனப்பெருக்கம் செய்து விடுகின்றன.

முட்டையிட்டு புழுக்கள் வெளி வருகின்றன. இவை எல்லாம் 2,3 மணி நேரங்களிலேயே நடந்து விடும். பின் புதிதாக பிறந்த அந்த புழுக்கள் அகோரப் பசியுடன் எப்படியும் தம்மை வளர்த்து விட வேண்டும் என்ற உயரிய நோக்குடன் நம் உடலின் தோலை குடைந்து உள்ளே சென்று நம் சதைகளை உண்ணுகின்றன. இப்பிடித்தான் இறந்த உடலில் புழுக்கள் வாழ்கின்றன.

ஆனால் இது வெட்ட வெளியில் உள்ள உடலுக்கு பொருந்தும். அதே நேரத்தில் மண்ணில் புதைக்கப்படும் உடலை தேடி ஈக்கள் செல்ல முடியவில்லை என்றாலும் வண்டுகள் குடைந்து செல்லும். அவை புழுக்களை பிறப்பித்து விரைவில் தின்று தீர்த்துவிடும். ஆனால் இது வெட்ட வெளியில் உள்ளதை விட சில காலம் பிடிக்கும்.

ஒரு வேளை சவப்பெட்டி யில் அடக்கம் செய்யப்படும் உடல்களை ஈக்கள், பூச்சிகள் அவ்வாவு எளிதாக அண்ட முடியாது. எனவே நம் உடலில் உள்ள பாக்டீரியா க்கள், பூஞ்சைகள் மட்டுமே சிறிது சிறிதாக உடலை அழிக செய்து பின் முற்றிலும் சதைகளை உண்டு வெறும் எலும்பு மட்டுமே எஞ்சும். இது பல வருடங்கள் எடுக்கும்.

ஆனால் குளிர்சாதன பெட்டியில் வைக்கப்படும் உடல்கள் அழுகிப்போவதில்லை காரணம் இந்த நுண்னுயிர்கள் வாழ்வதற்கு தகுந்த வெப்பநிலை தேவை. பொதுவாக 20Kc to 45Kc தேவை. எனவே வெப்ப நிலை அதிகம் ஆக ஆக அல்லது குறைய குறைய அதனால் வாழ முடியாது. இதனால் தான் குளிர் சாதன பெட்டி யில் வைக்கப்படும் உடல்கள் அழிவதில்லை.

அதே போல் கிருமி நாசினியை உள் செலுத்தி அதன் மூலம் இந்த நுண் உயர்களை கொன்று உடலை பாதுகாக்கும் இன்னொரு முறை embalming. அதாவது எத்தனால் உள்ளிட்ட பல வேதிப்பொருட்களை கலந்து உடலின் உள்ளே செலுத்தி விட்டு உடலை அழுக செய்யும் நுண் உயிர்களை அழிப்பது.

இது உயிரினங்களுக்கு மட்டும் அல்ல. நாம் அன்றாடம் வாங்கும் காய்கறிகளுக்கும் பொருந்தும்.

எடுத்துக்காட்டாக தக்காளியை எடுத்துக்கொள்ளுங்கள். அது மரத்தை விட்டுப் பறித்த உடனே இறந்து விடுகிறது. ஆனால் அதை நம் வீட்டு குளிர் சாதன பெட்டியில் வைப்பது மூலம் நீண்ட நாட்கள் வைக்கிறோம். ஒருவேளை அதை வெளியில் வைத்தால் சில நாட்களில் அழுகி விடும். காரணம் நாம் முன்பே நம் உடலுக்கு சொன்னது தான்.

ஆனால் நெறைய பேருக்கு இன்னொரு சந்தேகம் இருக்கும். இதெல்லாம் புரியுது. இதுல ஒரு லாஜிக் இருக்கு. ஆனால் பூட்டிய டப்பாக்குள்ள உள்ள அரிசி, மாவுக்குள்ள எப்படி வண்டு வருதுன்னு?? மாவுக்கும் அரசிக்கும் உயிர் ஏதுன்னு நமக்கு தோணும். ரொம்ப நல்ல சந்தேகம்.

நாம் முன்பே சொன்னது போல இந்த உலகம் கிருமிகள் சூழ் உலகம்.காற்று உள்ள இடங்களில் ஈரப்பதமும் நுண்ணுயிர்க்கிருமிகள் இருக்கும். ஏன் காற்றிலே இருக்கும். மூடிய பாத்திரம் என்பது வெற்றிடம் அல்ல. காற்று உள்ள இடம். எனவே அதில் அவைகள் இருக்கும். தனக்கென மாறுதல் இல்லாத ஒரு சூழலும் வெப்ப நிலையும் தொடர்ந்து ஒரே இடத்தில் கிடைக்கும் போது அவைகள் ஒரு உயிரை உண்டாக்கும் வல்லமை பெற்றது. போதாக்குறைக்கு உணவு வேற இருக்கும். இதனால் தான் சிறிய புழுக்கள் உருவாகி அவை வண்டுகள் ஆகின்றன. ஒருவேளை நாம் அடிக்கடி பாத்திரத்தை திறந்து திறந்து மூடும் போது அங்கே சூழல் மாறுதல் நிகழ்கிறது. புதிய காற்று உள்ளே செல்கிறது. பழைய காற்று வெளியேறி விடுகிறது. இதனால் அவை ஒரு உயிரை உருவாக்க ஏதுவான சூழல் இல்லமால் போய் விடுகிறது. ஓடுற பஸ்ல ஏறுவது கடினமா இருக்கிற மாதிரி. அதனால் தான் சில சமயங்களில் வெயிலில் திறந்து வைப்பார்கள் மாவு டப்பா வை. அதனால் நுண்ணுயிர் வளர வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. இந்த வகை நுண்ணுயிர்கள் திறந்த வெளியில் வெப்பத்தில் உருவாகால் போகக்கூடியது. மேலும் மிளகாய், வேப்பிலை, உப்பு என கிருமி நாசினிகளை உள்ளே போட்டு வைத்தாலும் அவைகள் அழிந்து விடும். அதனால் வண்டு பிடிக்காது. இதை வீடுகளில் செய்வதை நாம் பார்த்து இருப்போம்.

எனவே காலம் காலமா கிருமிகள் நம்மோடு வாழ்ந்து வருகின்றன.

அதே நேரத்தில் இந்த உலகில் ஒவ்வொரு காலகட்டத்திலும் covid19 மாதிரி வைரஸ் கிருமிகள் உருவாகி மனித குலத்திற்கு பெரும் ஆபத்தாக போய்விடுகிறது.

செல்கள் அற்ற, உயிரணுக்கள் அற்ற வைரஸ் கிருமிகள் எப்படிதான் உருவாகின்றன என்பது இன்று வரை அறிவியல் உலகம் ஒரு ஆச்சரியமாதான் பாக்குது.

- மன்னை செந்தில் பக்கிரிசாமி



# குறுங்கவிதைகள்

வெண்மேகம்
காளான் குடையானது
இலையுதிர்ந்த மரத்தின்மேல்

தூண்டிலைக் கடித்துக் கொண்டே
கரையேறாமல் நீந்துகிறது
வானில் பட்டம்

வழிவிட்ட இலைகளையே
இறங்கி மறைக்கின்றன
வெளிச்சக் கோடுகள்

எட்டி உதைத்து திரும்புகிறேன்
மீண்டும் தள்ளிவிடுகிறது
தாலாட்டும் வானம்

சன்னலின் வழியே
காதலுக்கு பச்சைக்கொடி
இதயத்தை நீட்டும் மரம்

சா.கா.பாரதி ராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு. 603002.
9944315732, 8610078040

# துளிப்பாக்கள்



பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்
6380704001

எசப்பாட்டு
பாடுகிறது பறவை
காற்றின் அலைவரிசைக்கு.

மனதிற்குள் வேண்டுதல்
சத்தமாய் வெடிக்கிறது
சிதறு தேங்காய்.

மனதில் ஓவியம் தீட்டி
காட்சிப்படுத்தி விடுகிறது
வாசிக்கும் கவிதைகள்.

காதலர்கள் தேனீர் சுவைக்க
நாணத்தால் தலைசாய்ந்தது
மேசையிலிருந்த பூச்செடி.

பாகன் இல்லாதபோதும்
கட்டுப்படுகிறது யானை
காலடியில் அங்குசம்.

வானமுடன் கூரையும்
மெல்ல நகர்கிறது
தாலாட்டும் படகு வீடுகள்.

காற்று தாலாட்ட
ஆனந்தமாய் தூளி ஆடுகின்றன
தூக்கணாங்குருவிகூடுகள்

கண்ணாம்பூச்சி ஆடுகிறது
ஒளிக்கீற்றுகளுடன்
இலைகள்

செதுக்க செதுக்க
இதமளித்தது சிலைகளுக்கு
சிலை வடிக்கும் சிறுவன்.

1.
ஒரு கவிதை புனைய வேண்டி
என் வரிகளுக்குள் வருமாறு
புத்தனை அழைக்கிறேன்
அவன் வர மறுக்கிறான்.

என்னை கருவாக்கி படிமமாய்
நிலைநிறுத்தி
பலபேர் பல கவிதைகள்
புனைந்து விட்டனர்.
நீயும் நிறைய கவிதைகள்
புனைந்து விட்டாய்.

கவிதைக்குள் வாழ்ந்து வாழ்ந்து
அந்த வாழ்க்கை
எனக்கு மிகவும் அலுத்துவிட்டது
என்கிறான் புத்தன்.

இதுவே உம்மைப் பற்றி
நான் எழுதும் கடைசிக் கவிதை.
இனி தொந்தரவு செய்ய மாட்டேன்.
இம்முறை மட்டும் வரும்படி
புத்தனிடம் கெஞ்சுகிறேன்.

என்னால் ஆகாதென்று
தீர்க்கமாகச் சொல்கிறான் புத்தன்.

ஆசையை முழுமையாய் துறந்த
புத்தனுக்கு போதி மரத்தின் கீழ்
ஞானம் பிறந்திருப்பது
உண்மைதான் போலிருக்கிறது.

2.
என் மரணத்திற்கு
நாளெல்லாம் அழுதான்
பால்ய நண்பன்.

வாரம் அழுதது
சொந்தமும் பந்தமும்.
பதினைந்து நாட்கள்
அழுதனர் பங்காளிகள்.



மும்மாதம் அழுதனர்
வயிற்றுப் பிள்ளைகள்.
திதி வரையிலும்
அழுது தீர்த்தாள்
முந்தி விரித்தவள்.

மறுவருடம் முற்றிலுமாய்
என்னை மறந்து போனது
இந்த மண்.

3.
வாசம் கொண்டு பேசும்
உன் மலர் பேச்சின்
மயக்கத்தில் கிடக்கிறேன்
வண்டென.

விசையின் முயக்கமின்றி
நகராமல் இருக்கும்
விளையாட்டு பொம்மை போல்
கட்டுண்டு கிடக்கிறது
என் மனசு.

என் இதயத்தில் வழியும் காதலும்
கண்களில் வழியும் கருணையும்
உன் உயிர் துளி பருக
விழைகிறது.

ஒரே ஒரு முறை சம்மதம்
தெரிவித்து விட்டு போ.
எவ்வித பதட்டமின்றி
சுகந்தமாய் உதிரட்டும்
உனக்கான கவிதைகள் எனக்குள்.

பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
அலைபேசி: 9443139353.

# இரவல் வேண்டுபவர்கள்

திராணியற்ற கேவல்கள்
உங்களை
வந்து சேராமல்
சுற்றி காத்து நிற்கும்
அத்தனை படைகளுக்கும்
பாராட்டு பத்திரம்
தயாரித்துக் கொண்டிருக்கிறேன்..

இயலாமையின்
உச்சத்தில்
உயிரை, தானே சிதைக்க
வரிசையில் நின்றிருக்கும்
அத்தனை ஜீவன்களுக்கும்
இரங்கல் செய்தி
எழுதிக் கொண்டிருக்கிறேன்..

விடைகளை
பதுக்கி வைத்துக்கொண்டு
விதண்டாவாதங்களை
முன்னிறுத்திக் கொண்டிருக்கும்
அறிவாளிகளுக்கு
கேடயங்கள் பரிசளிக்க
நேற்று இறந்த
குழந்தையின் எலும்புகளை
மாற்றியமைத்து கொண்டிருக்கிறேன்..

பசியின் அழகில்
வறுமையின் ஆடம்பரத்தில்
மயங்கி சுகித்திருக்கும்
காலத்திலும்
உண்மைகளின் கசப்பை
உணர வேண்டாமென
ஒதுங்கி நிற்கும்
அப்பாவிகளுக்காய்

கிரீடங்கள் தயாரிக்கத்
தொடங்கிவிட்டேன்...

முள்ளென நினைத்தால் முள்ளாக
பொன்னென நினைத்தால் பொன்னாக
இளக்கமாய் ஒரு கிரீடம்..

மூலப்பொருட்களின்
தட்டுப்பாட்டில்
தயாரிப்புகள் குறைந்துவிட்டன.
கொள்முதலுக்கு
விலையேதும்
நிர்ணயிக்கப்படவில்லை.

உங்கள்
மூளையையும்
மனதையும்
ஒரே முறை
பிய்த்துக் கொடுங்கள்..

கிரீடங்களின் தயாரிப்புகள்
தொடங்கப்படும்
உடனடியாக..

ரொட்டி துண்டங்களின்
வாசனையை விட..
கிரீடத்தின் நெடி
உயர்ந்ததாய் இருக்கையில்

தேவை இதுவாவென
யார் கேட்கப் போகிறார்??

**- கனிமொழி பாலாஜி**



# கானல் நீர்..!?

நடப்பது உடலுக்கு
நல்லது என்றார்கள்....?
நடந்து கொண்டே
இருக்கிறோம்....
நல்லது எதுவும் காணோம்.....!?

தலையில் சுமந்துள்ள மூட்டை
முடிச்சுகள்....?
எங்கள் எதிர்கால
வாழ்க்கை முடிச்சுகள்...!?

இடுப்பில் இருக்கும்
எங்கள் வாரிசுகள்...
வெறித்து பார்ப்பது
சாலையை அல்ல..
முடிவு தெரியா
தங்களின் எதிர்காலத்தை....!?

பசியோடும்...
பட்டினியோடும்....
சாலைகளில்
நடந்து கொண்டே
இருக்கிறோம்...!

எங்கே செல்கிறோம்
என்பது மட்டும்
கானல் நீராய்....!?




முனைவர். சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்
மன்னார்குடி

---



ம. ரக்ஷிகா
இராயபுரம், நான்காம் வகுப்பு
நீலன் மெட்ரிகுலேஷன் பள்ளி
நீடாமங்கலம்.



# வானம் பார்த்த பூமி!.

21 ஆம் நூற்றாண்டின் இந்த நவீன நகர்தலுக்கு நடுவேயும் இன்னமும் நூறு வருடங்களுக்குப் பின்தங்கிய அதே கட்டமைப்போடு தான் இருந்தது அந்த கிராமம். நூறு வீடுகள் கூட இருக்குமா என்று தெரியாது அதற்குள்ளாகவேதான் இருக்கும். ஊருக்குள் இருக்கும் ஒரே ஒரு கண்மாய்தான் அந்த ஊரில் வசிக்கும் அனைவருக்கும் ஜீவாதார மூலம். மேலும் அந்தக் கண்மாய்க் கரையில் இருக்கும் ஓடக்கரை ஐயனார் கோவில் என்னும் ஒரு ஓட்டு கூரையோடு கூடிய ஒரு மேடையும் அங்கு ஊன்றி வைக்கப்படுடிருக்கும் அருவாளும்தான் அந்த மக்களின் காவல் தெய்வம்!. அப்படிப்பட்ட கிராமத்திலிருந்து அடிச்சு பிடிச்சு ஒரு பன்னாட்டு மென்பொருள் நிறுவனத்துல வேலைக்கு வந்துட்டான் ராஜா. சென்னையில் பயிற்சி முடித்து பெங்களூரில் பணிக்கு அமர்த்தினர், எத்தனையோ முறை அம்மாவையும் அப்பாவையும் தன்னோடு நகரத்தில் வசிக்க அழுத்தி கூப்பிட்டும் அவர்கள் அங்கிருந்து வருவதாக இல்லை. அந்த குக்கிராமத்தில்தான் அவர்கள் உயிர் முடிச்சு இருப்பதாக அவர்கள் உணர்ந்ததால்!.

அதோட தொடர்ச்சியா நகரம் சார்ந்த வாழ்க்கையை வாழத் தொடங்கியவனுக்கு கிராமத்தின் நினைவுகள் கனவுகளாய் கலைந்துபோயின. இரவு பகலாக அசுரத்தனமான வேகத்துடன் இயங்கும் இயந்திர வாழ்க்கையும் பீட்சாவும் பர்க்கரும், கே.எப்.சி வறுத்த இறைச்சிகளும், வாணுயர்ந்த கட்டிடத்தின் வாசனையிலும் வார இறுதி பார்ட்டிகளிலும், கிளப் மற்றும் பப்புகளின் அணிவகுப்பிலும் நீர்த்துப்போயின, மேகம் கருக்கையில் அதை பார்த்து சந்தோசப்படுதலும், பெய்யும் மழையை தேக்கி கண்மாயில் வைக்க அதன் கரையை உயரப்படுத்துதலும், சேற்றிலும் சகதியிலும் கிடந்து மரம், மட்டை, ஆடு, மாடு, புல், முள் என்று சுற்றிலும் விரிந்து கிடக்கும் புன்செய் நிலங்களும், காட்டு வேலிக் கருவை மரங்களும்தான் அந்த மண்ணில் இருப்பவர்களின் வாழ்க்கையும்!. வாழ்க்கையின் ஓட்டத்தில் ஐந்து வருடங்கள் உருண்டோடிவிட்டது, இதற்கிடையில் அவன் அனுப்பிவைக்கும் பணமும் மாசத்தில் ஒருதடவை அவன் பேசும் போனுமே அவர்கள் இருப்பை அவனுக்கு உணர்த்திவந்தது.

நவீனத்தின் நாக்குகளை எல்லாம் தொட்டுப் பார்த்து சுவைத்துப் பார்த்து அதன் உச்சம் என்னவென்று சொக்கட்டான் போட்டு அவன் விளையாட தொடங்கி இருக்கும் நேரத்தில், பல சந்ததிகளை உருவாக்கிகிட்டே இருந்த அந்த மண்ணுல காலப்போக்குல மழை, தண்ணி எல்லாம் இல்லாமப் போக பொழப்பு தலைப்பு இல்லா ஊரு சனமெல்லாம் மதுரை, திருச்சி, மெட்ராசுன்னு பொழப்பு தேடி போயிட்டாங்க!. ஊருல இருக்குற நிலமெல்லாம் விதைக்கவும், அறுக்கவும் ஆளுக இல்லாம கட்டாந்தரையா கண்ணீர் வடிச்சுகிட்டே பக்கத்துல இருக்குற கருவை மரங்க கிட்ட அந்த்தக்காலத்து கதைகள மௌனமாவே சொல்லிக்கிட்டு கிடக்கு!. போன போக்குல, நவீனமும் நாகரீகமும் ஒரு முரட்டு அரக்கனா நின்னு எல்லாத்தையும் முழுங்கிப்

போட்டுறுச்சு. மண்ணொட மக்க மாருக அத்தனை பேரும் பஞ்சந்தாங்கிய இன்னிக்கு தேதிக்கு முழுசா மறந்தே போயிட்டாங்க , நம்ம ராஜாவும் சேர்ந்தே!.

வீரய்யாவுக்கு விவசாயத்தை விட்ட வேற வேலை தெரியாது, பரம்பரை பரம்பரையா அவன் முன்னோர்கள் விவசாயம் செஞ்சு வாழ்ந்த பூமிய சாமிய நினைச்சு வாழ்ந்து வர்ரான். அந்த கிராமத்தில் இன்னும் விவசாயத்தை விடாமல் புடிச்சு தொங்கும் ஜீவன்களில் அவனும் ஒருவன், அவன் சம்சாரம் வள்ளிக்கு புருசன்தான் உலகமே. கல்யாணம் ஆகி வந்தநாளில் இருந்து புருசன் பேச்ச மீறி நடந்ததேயில்ல, ஒத்த ஆம்பிளை புள்ளைய பெத்து அவன பாராட்டி சீராட்டி வளர்த்து ஆளாக்கியதுவர அவள் தியாகம் சொல்லி மாளாது. மகன் மேல அளவுகடந்த பாசத்தை கொட்டி வளர்த்தாலும் புருசனை மீறி மகனோட அவளுக்கு போக விருப்பமில்லாம இந்த கிராமத்திலையே காலத்தை கடத்திக்கொண்டிருந்தாள்.

மாமா, மாமா!..என்ன ஆத்தா மருமகளே மாமாவை தேடுற, ஒன்னுமில்ல அத்தை அப்பா மாமாவை கூட்டிட்டு வரச்சொன்னாக அதான் கூட்டிக்கிட்டு போகலாம்னு வந்தேன். ஓ அப்படியா உங்க மாமா இராம்நாட் கலெக்டர் ஆபிஸ் போயிருக்காரு ஏதோ விவசாயிகள் போராட்டமா!. சரிங்க அத்தை மாமா வந்ததும் நான் வந்திட்டு போனேனு சொல்லுங்க நான் கிளம்புறேன், ஆத்தி கால்ல சுடுதண்ணிய ஊத்திக்கிட்டுல நிக்குற இரு கூழு கரைச்சு வச்சிருக்கேன் கொஞ்சம் குடிச்சிட்டு போ.

ம், சரிங்க அத்தை!.

அத்தை சின்ன மாமா எப்பதான் ஊருக்கு வருவாங்க, அவங்களுக்கு நம்ம நியாபகம் எல்லாம் இருக்கா?!..அதெப்படி இல்லாம போகும் இவன நம்பிதான் எல்லாம் வேலையையும் ஒப்படைச்சு இருக்காங்களாம் அதனால ஊருபக்கம் வர முடியலையாம் ஆனா இந்த வருச ஐயனாரு கோயில் திருவிழாவுக்கு வர்ரேனு சொல்லிருக்கான். கவிதா வீரய்யாவின் தங்கச்சி மகள், அவளைத்தான் ராஜாவுக்கு கட்டிவைக்கனும்னு சின்ன புள்ளையில இருந்து பேசிவச்சிருக்காங்க. கவிதா பத்தாம் வகுப்புவரை படிச்ச புள்ள பார்க்க கிராமத்துக்கே உரிய லட்சணத்தோடு அழகாக இருப்பாள், அவுங்க அப்பா அம்மாவுக்கு வயகாட்டு வேலையில இருந்து கிராமத்தில் உள்ள வயசானவங்களுக்கு தேவையான பொருட்கள் வாங்கி கொடுப்பது என அனைத்து உதவிகளையும் செய்யும் துறுதுறுப்பனா பொண்ணு.

சின்ன வயசுல ராஜாவோட கூட்டாளி அவதான், பனங்கோந்தையில வண்டி செஞ்சு விளையாடுறது, தட்டான் புடிச்சு நூலைகட்டி பறக்கவிடுறது, ஓணான் புடிச்சு அடிச்சு விளையாடுறது, கண்மாயில மண்டிபோட்டு மீன் பிடிக்கிறது, பனையோலை ராட்டினம் செஞ்சு விளையாடுறது, ஆடுபுலி ஆட்டம், நொண்டியாட்டம் என இவர்களின் கால்படாத இடமில்லை அந்த ஊரில். கார்த்திகை அன்னைக்கு பனையோல கொழுக்கட்டையை திண்டுகிட்டு, சுவாமி வெளி வீதி வருகையில் ஓலை கட்டிய

பனையைக் கொளுத்தியதும் சொக்கப்பனை கொழுந்து விட்டெரியும். சுவாமி பின் வீதிப் பக்கம் போனதும். எரிந்து தணிந்த அந்த மரத் துண்டையும், ஓலைத் துண்டையும் இழுத்துக் கொண்டு போய்க் குப்பை மேட்டில் போடுவது அவர்களுக்கு ஒரு கொண்டாட்டம்!.

அவன் வர்ரதோட உனக்கும் அவனுக்கும் கல்யாணத்த பேசி முடிக்கனும்னு உங்க மாமா சொல்லிக்கிட்டு இருந்தாரு. எல்லாத்துக்கும் நல்லகாலம்னு ஒன்னு வரணும்ல என சொல்விட்டு கூழையும் சின்ன வெங்காயத்தையும் கவிதாவிடம் கொடுக்க, மடமடவென குடித்துவிட்டு கிளம்பினாள்.

‘‘கத்தரி பூத்திருக்கு
கலர் கலராய் ஊதாப்பு
ஊதாப்பு பூத்தாலும்
உள்ளுக்குள்ள உன் நினைப்பு
ஏலேலங்கடி ஏலேலங்கடியே
என் மாமான் எப்ப வரான்
சொல்லடி கிளியே’’

என நாட்டுப்புற பாட்டை பாடிக்கொண்டே வீட்டை நோக்கி ஓடிப்போனாள் மனதுக்குள் ஆயிரம் கற்பனைகளுடன் கவிதா!.

பெங்களூரில் லிவ்விங் டூகெதர் வாழ்க்கைக்கு பழகிப்போயிருந்தான் ராஜா. மூன்று வருசம் வேலையில் மட்டுமே கவனம் செலுத்தி வந்தவன் கவனம் சிதைய ஆரம்பித்தது, அவன் டீமில் புதிதாக வேலைக்கு சேர்ந்த கிறிஸ்டியால். பார்த்தவுடன் வசிகரிக்கும் கண்களும், ஆவியில் அவித்த இட்லி போல எப்பவுமே பிரெஸ்ஸா இருக்கும் அவள் முகமும், அவளுடைய மாடர்ன் டிரஸ்சும், நுனி நாக்கு ஸ்டைலான ஆங்கிலமும் அவனை அவளிடம் கட்டிப்போட்டது. வட மாநிலத்தை சேர்ந்த அவளுக்கு ராஜாவுடன் வீட்டை பகிர்ந்து கொள்ள ஆரம்பித்த உறவு நாளடைவில் கட்டில்வரை வந்தது.

அப்பா போன் அடித்ததில் இருந்து அவனுக்கு ஊருக்கு போகம் எண்ணம் அதிகரிக்க தோன்றியது. கிறிஸ்டி ஊர்ல கோயில் திருவிழா வருது அதனால ஊருக்கு கிளம்பனும், நீயும் வர்ரியா அப்பா அம்மாவை பார்த்து அப்படியே நம்ம விசயத்தையும் பேசிட்டு வருவோம்?!. இல்ல ராஜா எனக்கு ஐடியா இல்லை வில்லேஜ்லாம் எனக்கு செட் ஆகாது, கிறிஸ்டி நீ வந்துபாரு கண்டிப்பா உனக்கு எங்க ஊரு ரொம்ப புடிக்கும். ஓகே நீ கம்பள் பன்றதால வரேன் ராஜா, ஆனா ஒன்லி த்ரீ டேஸ்தான். ஆமா எப்ப போகனும்?!.. ரெண்டு நாள்ல கிளம்பனும், நான் இப்பவே டிக்கெட் புக் பன்னிடுறேன், நீ உனக்கு தேவையான திங்ஸ் எல்லாம் எடுத்து வச்சுக்க.

பெங்களூரில் மல்டி வால்வோ பேருந்தில் பயணத்தை தொடங்கினர் கிராமத்தை நோக்கி, ராஜாவின் மனமும் பயணப்படலானது. வயல் வெளிகளுக்குள் ஊடுருவிச் செல்லும் போது கருவேலம் மற்றும் பனை மரங்களினூடே ஆங்காங்கே மிகப்பெரிய கிணறுகளையும் அதன் பக்கத்திலேயே கிணற்று நீரை பகீரதப் பிரயத்தனம் செய்து மேலே கொண்டுவரப் போராடிக் கொண்டிருக்கும் டீசல் மோட்டர்களையும் அதைத் தொடர்ந்த பரந்த பொட்டல் வெளிகளில் கடலை, கம்பு, மிளகாய் என்று விதைக்கப்பட்டிருக்கும் விளை நிலங்களையும் காணும் போது அந்த களிமண் சூட்டோடு சேர்ந்து நமது கண்களும் சிவந்துதான் போய்விடும்.

ஆறு என்ற ஒன்றும் உண்டு, அதில் எப்போதாவது தண்ணீர் வருவதும் உண்டு. வைகையாற்று நீர் ஆங்காங்கே போய் விட்டு போனால் போகுது போ என்று இராமநாதபுரம் மாவட்டத்தின் உள்ளே சுருண்டு கிடக்கும் பஞ்சந்தாங்கிக்கும் அவ்வப்போது ஓரிரு துளிகளை கொடுத்து அவர்கள் தொண்டைக் குழிகள் வரண்டு போய் விடாமல் இருக்கச் செய்வதும் அவன் கண்முன் நிழலாடியது!.

இராம்நாடு கடைசி ஸ்டாப்பு வந்திருச்சு எல்லாரும் இறங்குங்க என டிரைவரின் சத்தம் அவனை உசுப்பிவிட்டது, கிறிஸ்டி எழுந்திரு ஊரு வந்திருச்சு. ஓ மை காட் என்ன ராஜா கிராமம்னு சொன்ன ஆனா ஓரளவு கொஞ்சம் பெரிய ஊரா இருக்கு?!.. இதுதான் எங்களுக்கு நகரம் , என்ன சாமான் வாங்கணும்னாலும் இங்க வந்துதான் வாங்கணும். இதுதான் டிஸ்டிக்  ஹெட்குவார்ட்டர்ஸ் இங்க இருந்துதான் இராமேசுவரம் கோவில், பாம்பன் பிரிட்ஜ் எல்லாம் போகமுடியும். வாவ்!, ராஜா எனக்கு ரொம்பநாள் ஆசை பாம்பன் பிரிட்ஜ் பார்க்கணும்னு.

கண்டிப்பா போகலாம் கிறிஸ்டி ஊர்த்திருவிழா முடிச்சிட்டு போகலாம், ஊருக்கு பஸ் இருக்கானு பார்க்குறேன் கொஞ்சம் வெயிட்பண்ணு.

அண்ணே பஞ்சந்தாங்கி போக பஸ் எப்ப வரும்?!.. தம்பி இப்பதான் போச்சு இனி ரெண்டு மணிநேரத்துக்கு ஒருதடவைதான் வரும்.

அண்ணே பஞ்சந்தாங்கி போகனும், போலாம் தம்பி ஏறுங்க. எவ்ளோனு சொல்லுங்க பெருச என்னத்த கேக்கபோறேன், ஐநூறு ரூபா கொடுங்க.

நானும் உள்ளூர்காரன்தான் நீங்கபாட்டுக்க இவ்ளோ கேக்குறிங்க, என்ன தம்பி செய்ய பெட்ரோல் விலையெல்லாம் ஏறிப்போச்சு நான் அங்க வந்திட்டு ரிட்டன் சவாரி இருக்காது சும்மாதான் வரணும். சரி ஏறுங்க நானூறு ரூபாயா கொடுங்க!.

கிறிஸ்டி போகலாம் வா, ஏன் ராஜா பஸ் என்னாச்சு?!. இப்ப பஸ் இல்ல அதான் வெயிட் பண்ணவேணாம்னு, ஓகே எவ்ளோ நேரம் ஆகும்?!.. எப்படியும் 45 மினிட்ஸ் ஆகும். நீங்க பஞ்சந்தாங்கில யார்வீட்டுக்கு தம்பி போகணும்?!.. அண்ணே என்னோட

வீட்டுக்குத்தான் போறேன், அப்படியா நீங்க யாரு மகன்?!. வீரய்யா மகன்!.. ஐயாவோட பையனா நீங்க, உங்கள நான் ஐயாவோட டவுன் பக்கம் பார்த்ததேயில்ல!.. நான் பெங்களூர்ல வேலை பார்க்குறேன் அங்கபோய் அஞ்சுவருசத்துக்கு மேல ஆச்சு, இப்ப ஊர்த்திருவிழாக்காக வந்திருக்கேன்.

உங்க ஐயா எவ்ளோ பெரிய மனுசன், எங்க விவசாய போராட்டம் ஆர்ப்பாட்டம்னாலும் மொதஆளா அவர்தான் நிப்பாரு. இப்பக்கூட இந்த சல்லிக்கட்டு போராட்டம் உங்க அப்பா தலைமையிலதான் இங்க நடந்துச்சு. விவசாயம்தான் அவருக்கு உசுரு, எத்தனையோ பேரு நிலத்தையெல்லாம் வித்துட்டு டவுனுக்கு வந்திட்டாக ஆனால் இன்னும் அந்த களிமன் தரையில வைராக்கியமா விவசாயம் பாக்குறது உங்க ஐயா மட்டுந்தான்.

உங்க ஐயா அடிக்கடி சொல்லுவாரு எல்லாத்தையும் விஞ்ஞானத்தால மனுசன் உருவாக்கிடுவான் ஆனா இந்த சோத்த விவசாயியும் விவசாயமும் இல்லாம உருவாக்க முடியாது. ஒருகாலம் வரும் இன்னைக்கு விவசாயத்த மதிக்காதவன் எல்லாம் அன்னைக்கு விவசாயிய தெய்வமா பார்ப்பானுங்க அப்டினு!.

உண்மைதான் அண்ணே அப்பா அடிக்கடி எங்ககிட்டேயும் இதத்தான் சொல்லுவாங்க. தம்பி இதுக்கு மேல வண்டி போகாது ரோடு போட கல்லு பரசி போட்டு இருக்காங்க கோவிச்சுக்காம இங்கிருந்து நடந்துபோயிடுங்க. பரவாயில்லை நாங்க போயிடுவோம், ஐயாவை ரொம்ப கேட்டதா சொல்லுங்க தம்பி ஆட்டோ மோகன்னு சொன்னா ஐயாக்கு தெரியும். வேகமாக தலையாட்டியவாறு லக்கேஜ்களை எடுத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தனர்.

இங்கிருந்து எவ்ளோ தூரம் நடக்கணும் ராஜா ?!.. ஒன்லி ஒன் கிலோ மீட்டர்தான். வழிநெடுக பொட்டல்காடும் அதன் அனல்காத்தும் அவனை ஏதோ செய்தது. பொறந்த ஊர்னு சொல்லிக்கிறதுல பெருமை ஒண்ணும் இல்லையின்னாலும்... அந்த ஊரும் பாட்டன் முப்பாட்டானுக சுவாசித்த காத்தும், அவுங்க வாழ்ந்த வாழ்க்கையும் அதிர்வுகளா அங்கதான் சுத்திகிட்டு இருக்கும்...அந்த மண்ணுல பல தாதுப் பொருட்களா விரவிக் கிடந்துதான் தாய், தகப்பனோடோ ஜீவ சத்தா நான் ஆகி இருப்பேன், அதனால அந்த மண்ணோட ஈர்ப்பு அவனுக்குள்ளே இருக்கறதும் இயல்புதானே!..

ஏதேதோ ஆசைகள் இருந்தாலும் நவீன யுகத்தில் எல்லாமே புது புது தொழில்நுட்பங்கள் எல்லாம் வந்துட்டாலும் மனிதம் ரொம்ப நீர்த்துப் போனதோட மட்டும் இல்லாம, மனிதர்கள், மனிதர்களோட இணைஞ்சு வாழும் ஒரு இயற்கையோட இசைந்த வாழ்க்கை முறை இப்போ தொலைஞ்சு போயிதான இருக்கு.

நாகரீகப் பெருக்கம் அறிவு வளர்ச்சின்னு சொல்லிகிட்டு மனுசன் தன்னை தனித்தனியா

கூறு போட்டுக்கிடுறதை ஏத்துக்கிட முடியலை. மாமா, அத்தை, பங்காளி, அங்காளி, மச்சினன், மாப்பிளை, சின்னம்மா, பெரியம்மான்னு ஜனக்கட்டுகளோட கல்யாணம், சாவுன்னு சொல்லி ஒண்ணா சாப்பிட்டு, சிரிச்சு, சண்டை போட்டு, உரிமைய கொடுத்து, உரிமைய கேட்டு, திமிரா ஒரு ரத்த பாசத்தோட வாழ்ந்த வாழ்க்கை இன்னிக்கு தொலைஞ்சுதான போச்சு!.

இன்னமும் குத்துயிரும் குலை உயிருமா இந்த ஒரு வாழ்க்கை முறையும், அங்க அங்க சில கிராமங்கள்ள இருந்தாலும்!.

மனுசங்க கிட்ட சுயநலம் கூடிக் கூடி போட்டி பொறாமையில உறவு முறைகள் நீர்த்துப் போயிகிட்டுதான் இருக்கு!. ஆயிரம்தான் நகரத்து வாழ்க்கையில் சில சுகங்களை அனுபவிச்சாலும், நம்ம ஊரு வயக்காட்டுல கருக்குன்னு ஒரு முள்ளு குத்தி அதை பிடிங்கிப்போட்டு அந்த வலியை அனுபவிக்கிற சுகத்தை பட்டணத்து வாழ்க்கை கொடுத்துடுச்சுனு சொல்லிர முடியாதுல!.,

என்ன ராஜா எதுவும் பேசாம ஏதோ யோசனையிலயே வர்ர?!. இல்ல என் கிராமத்து வாழ்க்கையை யோசித்து பார்த்தேன் சுகம்ங்கறது உடம்புக்கு மட்டும் கிடைச்சா அது மிகப்பெரிய வலியா மாறிடும், சுகம் மனசுக்கு கிடைக்கணும் அதுதான் நிஜமான சந்தோசம். ஏனோ அந்த சுகத்த நீண்ட நாளுக்கு பிறகு என் கிராமத்து மண்ணுல மிதிச்சதும் உணருகிறேன்!.

ஆத்தி யாரு அது தூரத்துல வர்ரத பாத்தா நம்ம ராசா மாதிரில இருக்கு?!. ராசா மாதிரி இல்ல உன் மகன் ராசாதான் வர்ரான். கூட யாரோ ஒரு பொம்பள புள்ள வேறல வருது, ஏதாவது கூட்டாளியா இருக்கும் வரட்டும் என்றார் வீரய்யா.

எங்கும் பொட்டல்காடாய் இருந்த பூமியில் இயற்கை அன்னை பச்சை பட்டாடை உடுத்தியது போல் திடீரென சாலையின் இருமறுங்கிலும் வயல்வெளிகள். வாவ் ராஜா இங்க மட்டம் இவ்ளோ சூப்பரா பயிர்கள் வளர்ந்திருக்கு , அங்கபாரு பயிர்களுக்கு நடுவுல அழகா ஒரு வீடு கிராமத்து படத்துல பார்க்கிறமாதிரியே. வா அந்த வீட்டுக்கு போகலாம் கிறிஸ்டி, அவங்க ஒன்னும் சொல்ல மாட்டாங்களா?!. பார்த்துக்கலாம் வா, வாசலின் அருகில் போனதுதான் தாமதம் ராஜாவை கட்டிபிடித்து நலம் விசாரித்ததை ஆச்சரியமாக பார்த்தாள் கிறிஸ்டி. இந்தப்புள்ள யாருப்பா? !. என்கூட வேலைபாக்குற பொண்ணும்மா நம்ம ஊருக்கு திருவிழாவ பாக்க வரேனு சொன்னுச்சு அதான் கூட்டியாந்தேன். சரி சரி வாத்தா நல்லாயிருக்கியா களைப்பா வந்திருப்பிங்க காலுமூஞ்சிய அலம்பிட்டு வாங்க டீ போட்டு வைக்கிறேன்.

என்னப்பா இப்பதான் ஊரு பக்கம் வர வழி தெரிஞ்சதா உனக்கு?!..விவசாயம் வேணாம்னு கம்ப்யூட்டர் வேலைக்கு போயிட்டிங்க ஆனா நாங்க சேத்துல காலு வைச்சாதான் நீங்க சோத்துல கை வைக்க முடியும் அப்பு என தோளை தட்டிக்

கொடுத்தார் வீரய்யா. அப்படிலாம் இல்லப்பா, அங்கிள் நல்லா இருக்கிங்களா?!.. எனக்கு என்னத்தா குறைச்சல் மகராசனா இருக்கேன். சரி போய் சாப்பிடுங்க நான் உரம் வாங்கிட்டு வந்திடுறேன்.

ஏன் ஆண்டி ராஜாதான் நல்லா சம்பாதிக்கிறான்ல , அங்கிளும் நீங்களும் அவன்கூடவே பெங்களூர் வரலாம்ல?!. என்ன ஆத்தா இப்படி பொசுக்குனு சொல்லிப்புட்ட ஆறு பொம்பளைப் புள்ளைகளையும், ஒரு ஆம்பளைப் புள்ளையையும் அவுக அய்யா இந்த மண்ணுக்குள்ள நின்னுதான் காப்பாத்தி இருக்காங்க!.

மழை தண்ணி இல்லாம போன காலத்துல ஆத்துப் பாசனமும் இல்லாத நேரத்துல (வைகை ஆறு தமிழகத்துக்கு வராத காலங்கள்) மர மட்டைகள எல்லாம் மனுசப்பயக வெட்ட ஆரம்பிக்க, ஆரம்பிக்க மனுசனுக்கு மழை வெளையாட்ட காட்ட ஆரம்பிச்ச நேரம். 1850 வாக்குல எங்க பாட்டையா எல்லாம் அந்தமான் பக்கம் போயி கடை கண்ணி வச்சி ஊர்ல இருந்த புள்ளைக் குட்டிக எல்லாம் பொழைக்க காசு பணம் அனுப்பி இருந்து இருக்காங்க.

அந்த காலத்துலதான் கொடுமையான பஞ்சம் அப்போதைய இராமநாதபுரம் மாவட்டத்துல தலை விரிச்சு ஆடி இருக்கு. எங்கப்பத்தா சொல்லும். காசு பணம் இருக்குமா ஆனா வயித்துப் பசி ஆத்த நெல்லு, புல்லு கிடைக்காதாம். ஒரு வேள நெல்லுச் சோறுதான் சாப்பிடுவோம், அதுவும் போகப் போக கொறஞ்சு ஒரு மாசத்துக்கு ரெண்டு தவணைதேன் நெல்லுச் சோறு சாப்பிடுவோம்.. மத்தபடிக்கு கம்பு, கேப்பை கூழுதேன் குடிப்போம்னு..

அம்புட்டு பஞ்சத்துலயும் அஞ்சாறு புள்ளைக் குட்டியள வச்சுகிட்டு நாங்க பொழச்ச பொழப்பு இருக்கே ஆத்தா, அதச் சொன்னா. அம்மூரு கம்மா நெறஞ்சு போகுற அளவுக்கு கண்ணுத் தண்ணி இருக்குமத்தா, அம்புட்டு கஷ்டம்..அப்புறந்தேன் ஆத்து தண்ணி அப்போ, அப்போ வரயில ஏதோ நெல்லுப் புல்ல விதைச்சு பொழைச்சு வந்தோம்..

காசு கண்ணி இல்லாத மக்க எல்லாம் நடந்தே தஞ்சாவூர் சீமைக்கு கருதடிக்க போயிருவாக, செல பேரு ஆட்டுக் கிடைய பத்திக்கிட்டுப் போயிருவாக!. ஊரே வெறிச்சோடிப் போயித்தேன் கெடக்கும்!. எங்குட்டுப் பாத்தாலும் பெரிய மனுசகள்ள இருந்து புள்ளைக் குட்டிய வரைக்கும் பசி… பசி.. பசிதேன்! நல்லா இருக்குற ஆளுகள பாத்து எல்லா சனமும் வேற ஒண்ணும் வேணாம் ஒரு கை சோறு போடுங்கய்யான்னு கேக்குறத என் காதால கேட்டு இருக்கேன்., ஒரு மனுசனுக்கு எம்புட்டு கஷ்ட நஷ்டமும் வரலாமத்தா ஆன வவுத்துக்கு மட்டும் கஷ்டம் வரவே கூடாது..

அம்புட்டு கஷ்டத்துலயும் நம்ம கெணத்து தண்ணி முழுசா வத்தலன்னு பெருமையா தண்டட்டி ஆட எங்கப்பத்தா சொல்லும்!. இன்னொருமுறை அதுபோல ஒரு நிலைமை

வந்திடக்கூடதுனுதான் நானும் அவரும் இந்த மண்ணே கிடைனு கிடக்கோம், எங்க ஊசுரு போனாலும் இந்த மண்ணுல போனாதான் எங்க கட்ட வேகும் ஆத்தா!.

இவனுக்கு வேணும்னா எந்த அடிப்படை வசதியும் இல்லாம இன்னமும் இருக்குற இந்த கிராமத்துக்குள்ள இருந்து கம்ப்யூட்டர் படிச்சது பெருசா தெரியலாம் ஆனா அப்பன், பாட்டன் முப்பாட்டன் பொறந்து வாழ்ந்த ஊர்ல வாழ்றத வாழ்க்கையோட பெரும் பேறாத்தான் நான் நினைக்கிறேன்!.

ராஜா என்ன அமைதியா வீட்டுக்கு பின்னால வயக்காட்டுல வந்து உக்காந்துட்ட, ஒன்னுமில்ல அம்மா சொன்னதெல்லம் யோசிச்சு பார்த்தேன், சின்னவயசுல எப்படியெல்லாம் இருந்த ஊர் இப்ப எப்படி கலையிழந்து போய் நிக்குது!.

இப்ப புரியுதா கிறிஸ்டி எங்க மண்ணோட மகத்துவம் , எனக்கு என்னவோ இதுலாம் நான்சென்சா இருக்கு ராஜா இந்த நவீன உலகத்துல இன்னும் விவசாயம்னு எந்த வசதியும் இல்லாத கிராமத்துல கிடக்கிறத நெனச்சா!. உனக்கு அப்படி தோனலைனாதான் ஆச்சரியம், ஆனா நான் ஒரு தெளிவான முடிவு எடுத்துட்டேன் கிறிஸ்டி எங்க அம்மா சொன்னதுபோல இனியொரு பஞ்சம் இந்த மண்ணுல வராம இருக்கணும்னா கம்ப்யூட்டர் முக்கியமில்ல விவசாயம்தான் முக்கியம்னு!.

ஏதேதோ திட்டங்கள தீட்டி இலவசங்கள அறிவிக்கிற அரசுகள் எல்லாம் விவசாயம் நலிவுறாம இருக்கறதுக்கு என்ன என்ன செய்யலாம்னு ஒரு விழிப்புணர்வை கொடுக்கறதும் கிடையாது, படிச்சு முடிச்சு பட்டணத்து வேலைக்குப் போறது மட்டும் முன்னேற்றம் இல்லை படிச்சு முடிச்சு விவசாயம் செய்றதும் முன்னேற்றம்தான்னு இளைஞர்களுக்கு புரிய வைக்கிறதும் கிடையாது. (புரிஞ்சு இருந்தா எதுக்கு வெளிநாட்டுக்கு போயி கஷ்டப்பட போறாங்க)

பாட்டன், முப்பாட்டன்னு செஞ்சுகிட்டு இருந்த ஒரு தொழில் விவசாயம். அது நம்ம அப்பாங்க காலத்துல இருந்து தடம் மாறிப் போயி இன்னிக்கு அதோட தொடர்ச்சியா நம்மள்ள நிறைய பேரு விவசாயம் செய்றது எல்லாம் ஒரு பிற்போக்குத்தனம்னு புரிஞ்சுகிட்டு நகரங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் போய் ஒக்காந்துட்டோம். கீழை நாடு, கீழை நாடுன்னு சொல்லி சொல்லியே நம்மள கீழ அமுக்கப்பாக்குற, அல்லது கீழ அமுக்கிப் போட்டு இருக்கும் மேலை நாட்டு நாகரீகத்தைதான் நாம உசத்தியா பாக்குறோம். ஆனா அதை விட உயர்வான நமது கலாச்சாரத்தையும், நாகரீகத்தையும், பண்பாட்டையும் மெல்ல மெல்ல மறக்க ஆரம்பிச்சுட்டோங்கிறது வேதனையான விசயம் கிறிஸ்டி!.

போன தலைமுறை வரைக்கும் கூட்டம் கூட்டமா, எங்க பாட்டன், முப்பாட்டன்னு, சொந்தகிராமங்களை மையப்படுத்திதான் வாழ்க்கைய வாழ்ந்து இருக்காங்க. ஆனா சடார்னு சொந்த கிராமங்களை எல்லாம் விட்டு பொழப்புக்காக வெளியே வந்ததோட

மட்டும் இல்லாம திரும்ப அந்த கிராமங்களுக்கு போறதே இல்லை என்பது வலிக்கக் கூடிய கனமான உண்மை.

இன்னும் வரப்போகிற சந்ததிகளுக்கு எல்லாம் சொந்தக் கிராமங்களின் மதிப்பினை எடுத்துச் சொல்லியே ஆக வேண்டும். தலை முறைகள் கடந்த எமது மூதாதையர்களின் வாழ்க்கைகள் அங்கே மண்ணோடு மண்ணாக கலந்து கிடக்கின்றன அவற்றை நாம்ம விட்டு விடக் கூடாதுனு புரியவைக்கணும்!..

ராஜா ஆர் யூ மேட் என்ன பேசுறேனு உனக்கு புரியாதா?!..நான் புரிஞ்சுதான் பேசுறேன் இத்தனை நாளா நாகரீகம்கிற பெயர்ல என்னோட அடையாளத்தை இழந்து வாழ்ந்திருக்கேன் இனி அந்த தவறை செய்யமாட்டேன் நான் அதில தீர்க்கமா இருக்கேன்.

சாரி ராஜா உன்கிட்ட இதை எதிர்பார்க்கல, என்னால எல்லாம் இந்தமாதிரி ஒரு கிராமத்தில முடங்கி கிடக்க முடியாது நான் நாளைக்கே ஊருக்கு கிளம்புறேன். உனக்கும் எனக்கும் ஒத்துவராது, கிறிஸ்டி நான் சொல்றது கொஞ்சம் யோசித்து பாரு , சாரி ராஜா சான்சே இல்ல நீன் உன் லைப்ப உன் இஷ்டப்படி வாழு பட் என் லைப்ப உன்னோட சேர்ந்து பாழாக்க நான் விரும்பல.

சரி அட்லீஸ்ட் திருவிழா வரைக்கும் இருந்திட்டு போ, இனி ஒரு நாள் கூட என்னால இருக்க முடியாது. ஆண்டி அங்கிள் நான் கிளம்புறேன் எனக்கு முக்கியமான வேலையிருக்கு ஆபிஸ்ல உடனே வரச்சொல்லிட்டாங்க, என்ன ஆத்தா வந்த கால்ல சுடுதண்ணிய ஊத்திக்கிட்டு நிக்குற இப்பவே போகணும்னு?!. திருவிழா முடிஞ்சு போலாமே, இல்ல ஆண்டி அதுக்கு டைம் இல்ல. வள்ளி அந்தபுள்ளைதான் ஏதோ முக்கியமான வேலையிருக்குனு சொல்லுதுல சரி ஆத்தா பாத்து போங்க. ராசா அந்த புள்ளைய பதனமா பஸ் ஏத்திவிட்டுவாப்பா!.. இல்ல அங்கிள் ஆட்டோ வரச் சொல்லியிருக்கான் நானே போயிடுவேன், கிறிஸ்டி ப்ளீஸ் ராஜா நீ எதுமே எங்கிட்ட பேசவேணா உன் முடிவில ஏதாவது மாற்றம் இருந்தா சொல்லு இல்ல ஆளாவிடு! ..

அத்தை சின்ன மாமா வந்திருக்காம் அம்மா சொன்னாங்க எங்க ஆளையே காணோம். கூட வேலைபாக்குறவுக வந்தாங்க அவங்கள வழியனுப்ப ரோட்டுக்கு போனான், வந்திருவான் இரு. இல்ல நான் மாமா வ அங்கேயே போய் பாத்துக்குறேன் என வேகமாக ஓடினாள்.

வீட்டை நோக்கி தீர்க்கமாக வந்தவன் எதிரில் என்ன மாமா நல்லா இருக்கிகளா ?!. எங்கள எல்லாம் பட்டிணம் போனதும் மறந்துட்டிங்கதான!..ஏய் கவிதா நல்லா இருக்கியா அத்தை மாமா எல்லாம் எப்படி இருக்காங்க!.. உன்ன மறப்பனா?!.. சின்னபுள்ளையில இருந்தே என் கூட்டாளி நீதான, பரவாயில்லையே அந்த நிபாகம் எல்லாம் இருக்கா?!. அடிவாங்குவ நக்கலடிச்சா பாத்துக்க, சரி சரி மாம சாயங்காலம் கோயிலுக்கு வாங்க அங்க பேசிக்கலாம் நான் கிளம்புறேன் அப்பாக்கு வயலுக்கு கஞ்சிகொண்டு போனும்!..

அந்த கம்மாக் கரையில இருக்குற ஓட்டுக் கூரை போட்டு சாணம் மொழுகி இருக்குற மண் திண்ட என்னான்டு நீ நெனைச்ச?.. அதுல ஐயனாரு உசுரோட எறங்கி இருக்காகப்பு...‘‘ன்னு

அப்பத்தா அன்னைக்கு என்கிட்ட சொன்னப்ப அந்த லாந்தர் வெளக்கு வெளிச்சதுல அவுங்க கண்ணு அவ்ளோ பளீர்னு பிரகாசமா இருந்துச்சு ஆனா எனக்கு அதோட அர்த்தம் அப்போ புரியலை. இப்ப வெளங்கிடுச்சு மீண்டும் அந்த பளீர் வெளிச்சத்த கவிதா கண்ணுக்குள்ள பாத்தேன்!.

ராசா நீ லீவுல வந்திருக்கதோட உனக்கும் கவிதாக்கும் பேசி முடிச்சிரலாம்னா உங்க ஐயா கேட்டாரு?!. அப்புறம் உனக்கு எப்ப லீவு கிடைக்கும்னு தெரியாதுல அதான்!.. அம்மா இனி நான் ஊருக்குலாம் போகல, நான் இங்கயே இருந்து ஐயாவோட விவசாயத்தை பாக்கலாம்னு இருக்கேன்!.. ஏன் ஐயா , ராசா அந்த ஓடக்கரை ஐயனாருதான் உனக்கு நல்ல புத்திய கொடுத்திருக்காப்ல!..

கவிதாக்கு நான்தான், எனக்கு கவிதாதான்னு சின்னபுள்ளையா இருக்கப்பவே பேசிவச்சதுதான, ஐயா விருப்பபடியே செய்ய சொல்லுங்கம்மா என எழுந்து போனான். வீட்டுக்குள் இருந்தே அனைத்தையும் கேட்ட வீரய்யாவுக்கு சந்தோசம் இருப்பு கொள்ளல, வள்ளி நான் சொல்லல எனக்கு பிறகு என்மகன்தேன் இந்தபூமியில விவசாயத்தை காப்பத்துவானு. ஐயனாருக்கு கடமைபட்ட குடும்பம் அதுக்கு அடுத்த தலைமுறை இல்லாம போயிடுமா என்ன?!..

கோயிலுக்கு நேரமாச்சு சாமி சாமான் எல்லாத்தையும் ஓலைப்பெட்டில கணக்கா எடுத்துவச்சுக்க, தப்பு ஓசை காதைபிளக்க, குலவ சத்தம் சேர்த்து ஒலிக்க முறுக்கிய மீசையோடு ஒரு கையில சாட்டையோடு மறுகையில அறுவாளோடு ஊர்சூழ ஐயனாராய் ஆடிவந்தார் வீரய்யா!..

ஐயனாரு கோயில்ல கிடாவெட்டி விமர்சையா பொங்கல் வச்சு கொண்டாடினாலும் அங்க இருக்கிறவர்களுக்கு மத்தியில் பிரகாசமாய் ஒளிர்ந்தது பச்சை பசேல் கிராமமும் அதனோடு கவிதாவும்.

இலைகளையும் கிளைகளையும் எங்கெங்கோ நாம் பரப்பினாலும் நமது வேர்கள் நம் சொந்த மண்ணை விட்டு விடக் கூடாது என்ற ஏக்கத்தை பூர்த்தி செய்தவனாக புது அவதாரம் எடுத்திருந்தான் ஐயனாரு வாசலிலே அந்த வானம் பார்த்த பூமியின் அடுத்த தலைமுறை விவசாயி!..

‘‘இன்னும் வானம் பார்த்த பூமிகளை காத்து நிற்பது ஐயனாரு மட்டுமில்லை அவரோடு சேர்ந்த வீரய்யா ராசாக்களுமே’’



## கி. எல்லாளன்

வாலாந்தரவை அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்

# எண்ணங்கள்

என் இனிய எழுத்தாணியே!
இன்று உனக்கு வேலை
வந்துவிட்டது போலும்...

என்னில் துவங்கும் எண்ணங்களை
எழுத தொடங்கி விட்டேன்...

காகிதங்களில் நிரப்பி விட்டெறியும்
போது
கரைந்து போகும் அத்தனை
ஆர்ப்பரிப்பும்...

உற்சாகம் பொங்கும் போதும்
உள்ளம் குமுறும் போதும்
காதல் பெருகும் போதும்
கல்யாணம் கசக்கும் போதும்
அவமானம் அறையும் போதும்
அழுகை அடைக்கும் போதும் - என
உணர்ச்சி பொங்கிய வேலையெல்லாம்
உள்ளே வைத்தது போதும்...

வெறும் தீக்கு இரையாக்காதீர்கள்-
தீ போன்ற எண்ணங்களை
தீப்பந்தம் ஆக்குங்கள்..

எத்தனை மெழுகுவர்த்திக்கு
உயிர் வரும் என்று இன்று
உணர மாட்டீர்கள்..

நான் ஒரு தீப்பொறி
இந்த நொடி...

கனவுகளை கலைக்காதீர்கள்
இன்னொரு கண்களை தட்டட்டும்..

பூட்டு போட்ட மனங்களை
பிளக்கும் திறவுகோல்
படைப்புகள்..

நாளும் பொழுதும் மாறலாம்..
உலகம் ஒரு திரையில் சுருங்கலாம்..
நாளிதழ் மின்னிதழ் ஆகலாம்..

வாசனை இல்லா பக்கங்களாயினும்
வாசிக்க பழகுங்கள் - உங்கள்
சுவாசங்களில் எழுச்சி பிறக்கும்..
நல்லெண்ணங்களால்..

- துர்க்கா சம்பத்குமார்

# கவிதை துணுக்கு...

## மயக்கம்
உன் விழி அசைவில் ஐம்புலனும் தடுமாற..!
புவி அசைவை உணர்ந்தேன்..!!

## பேரழகு
ஒப்பனை இல்லா முகமே
ஒப்பற்ற அழகு என்கிறது..!
ஒவ்வொரு நாளும் அவள் முகம் பார்க்கும் கண்ணாடி..!!

## மெய்காதல்
தேகப் பார்வை சந்தேகப் பார்வை..!
மெய்காதல் காண முடியாது..!!

## பசி
தின்றுவிட்டாள் முழுவதுமாக..!
என்னை மட்டுமல்ல என் இரவுகளையும்..!!

## இல்லறம்
வாதம் பிடிவாதம்..!
வதுவைக்கு ஏற்ற வேதமல்ல..!!

## கொடுங்கோபம்
கோபம் பிறர் கொல்ல, தன் கொல்லும்..!
உயிர் நோக ஊமை உத்தமம்..!!

## இளமுதுமை
வயக்கடல் வரையே ஆட்டம்..!
புறக்கடல் கண்டதும் அடங்கிவிடும்..!!

- மனோ குணசேகரன்
புள்ளவராயன் குடிக்காடு



**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மண்ணனின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal  Thiravukolmagazine